
புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனியுடன் நேர்காணல்



தேசம் சஞ்சிகையின் தலித் சிறப்பிதழ் 3ம் பக் – 6ம் பக்




சில்லறை வியாபாரிகளுக்கு உலை வைக்கும் பன்நாட்டு வியாபார முதலைகள்




தொடரும் ஈஸ்ற்ஹாம் மஹாலட்சுமி ஆலய விவகாரம்



மாதம் ஒரு முறை வெளிவரும் இலவச இதழ், ஒக்ரோபர் 2007 – நவம்பர் 2007, குரல் 19

# லண்டன் குரல்

Voice of London Tamils

## இரு தமிழர்கள் உட்பட மூன்று சிறைக் குற்றவாளிகள் மீது

# விசாமோசடிக் குற்றத்திற்கு 2.3 மில்லியன் பவுண் அபராதம்

விசா மோசடிக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் இரு தமிழர்கள் உட்பட மூவரிற்கு 2.3 மில்லியன் பவுண்கள் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. ஆறுமுகம் கனகேஸ்வரன் (56), பொன்னுத்துரை புவனேந்திரன் (52), ஆகிய இரு இலங்கைத் தமிழர்கள் மீதும் ஹரி வில்சன்(48) என்ற சிம்பாவேயைச் சேர்ந்தவர் மீதுமே இவ்அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது.

இவர்கள் 150 பேருக்கு மோசடியான விசா விண்ணப்பங்களை மேற்கொண்டதற்காக 2005 ஒக்ரோபரில் சிறைத் தண்டனை பெற்றிருந்தனர்.

London School of Accountancy என்ற ரூற்றிங் பகுதியில் உள்ள கல்லூரியில் கற்கிறார்கள் என்ற பெயரில் மோசடியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. 1,200 பவுண்களுக்கு ஹரி வில்சன் ஆவணங்களைத் தயாரித்துக் கொடுத்து உள்ளார். ஆறுமுகம் கனகேஸ்வரன், பொன்னுத்துரை புவனேந்திரன் இருவரும் ஹரி வில்சனுக்கு உதவியாக இருந்து விண்ணப்பதாரிகள், மாணவர்கள் என உறுதிப்படுத்தி உள்ளனர்.



அபராதம் விதிக்கப்பட்ட குற்றவாளிகள் கனகேஸ்வரன், புவனேந்திரன், வில்சன்

இம்மூவரும் ஸ்கொட்லன்ட்யாட் இன் ஒப்பிரேசன் மக்ஸிம் மற்றும் தென் ஆபிரிக்க பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் தம்மீது சுமத்தப்பட்ட 20 குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்டனர். ரூற்றிங்கைச் சேர்ந்த ஆறுமுகம் கனகேஸ்வரனுக்கும், பொன்னுத்தரை புவனேஸ்வரனுக்கும் இரண்டு ஆண்டுகளும் 10 மாதங்களும் தண்டனை விதிக்கப்பட்டது. ஹரி வில்சனுக்கு 3 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களை அபராதப் பணத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டும்படியும் தவறினால் மேலதிக காலச் சிறைத் தண்டனையை அனுபவிக்கும் படியும் ஐஸல்வேர்த் நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. ஹரி விலசனும் ஆறுமுகம் கனகேஸ்வரனும் தமது அபராதத்தை ஓராண்டுக்குள் கட்ட வேண்டும். மூன்றாமவருக்கு 18 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டு உள்ளது.

ஹரி வில்சனுக்கு 285,000 பவுண் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. அதனைக் கட்டத் தவறினால் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

ஆறுமுகம் கனகேஸ்வரனுக்கு 416,000 அபராதம். கட்டத்தவறினால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை. பொன்னுத்துரை புவனேந்திரனுக்கு 1.6 மில்லியன் அபராதம். கட்டத்தவறினால் எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை.

# விசா மோசடி செய்த தம்பதிகள் மாட்டினர்

உணவகங்களில் வேலை செய்ய வென்ற பெயரில் மோடிசயாக work permit எடுத்துக் கொடுத்து வந்த தமிழ் தம்பதிகள் மீதான குற்றம் சென் அல்பன்ஸ் கிரவுன் நீதிமன்றத்தில் நிருபிக்கப்பட்டு உள்ளது. சிவாகரன் நகரட்ணம் அவருடைய மனைவி நிரஞ்சலா பரமேஸ்வரன் ஆகிய இருவர் மீதான குற்றங்களும் ஒக்ரோபர் 5ல் நிருபிக்கப்பட்டது.

சவுத்தொலில் உள்ள Lasani மற்றும் வெம்பிளியில் உள்ள Gana உணவகங்களில் வேலை செய்யவென 23 பேருக்கு work permit விண்ணப்பிக்கப்பட்டு அவர்களுக்கு விசாவும் வழங்கப்பட்டது. அவ்வாறு வந்தவர்கள் யாரும் மேற்குறிப்பிட்ட உணவகங்களில் ஒரு போதும் வேலை செய்யவில்லை என்பது தெரியவந்துள்ளது.

லசானி முகாமையாளர் சந்திரசேகரம் ஜெகதீசன் விடுவிக்கப்பட்டார்.

# மட்டை மோசடியில் பெண்ணும் சிறை

மட்டைமோசடியில் ஈடுபட்ட பெண்ணுக்கு மூன்று அண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. தனது குற்றத்தை மறுத்த கிங்ஸ்ரனைச் சேர்ந்த தாரணி சற்குணநாதன் (தாரா) (27) என்பவருக்கே மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

மோசடிக் கும்பல் ஒன்றுடன் தொடர்புபட்டே இவர் இயங்கியது நீதிமன்றில் தெரியவந்து உள்ளது. இவர்களது குழுவின் தலைவர் சிவநாதனுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

இவர்களுடன் மேலும் நால்வருக்கும் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. லோகராஜா செல்லத்துரை (23) லூட்டன், ஜெசிக்கா சோகான் (20) ஹேரன்சி, துதிபாலசிங்கம் மதியழகன் (22) ஹரோ, ஞானமுகன் பூபாலசிங்கம் (30) ஹரோ. ஆகியோரே இந்த மோசடியில் சம்பந்தப்பட்டு தண்டனை பெற்றுள்ளனர்.

இவர்களில் மதியழகன், சிவநாதன் ஆகியோர் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Managment Lease**

**நிர்வாகக் குத்தகைக்கு**

Hornchurch, Essex பகுதியில் 32 வருடங்களாக ஒரே உரிமையாளரின் கீழ் நடத்தப்பட்ட நியூஸ் ஏஜென்ற் நிர்வாகக் குத்தகை (Managment Lease)க்கு உண்டு. மாத வாடகை 2500 பவுண். 4 வருடங்களுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:020 8905 0452


**வீடு வாடகைக்கு**

CLAYHALL, ILFORD ல் இரு பெரிய அறைகளைக் கொண்ட GROUND FLOOR MAISONETTE வாடகைக்கு உண்டு. அண்மையில் முழுமையாகத் திருத்திய நிலையில் வீடு உள்ளது. முற்றிலும் புதிய சமையலறை, புதிய குளியலறை & NEW FLOORING. பொதுப் போக்குவரத்து வசதிகளும் உண்டு.

மாதா வாடகை: 900 பவுண்

(HOUSING BENIFIT ஏற்றுக் கொள்ளப்படும்)

தொடர்புகளுக்கு: 07800 596 786



குரல்18, ஒக்ரோபர் 07

லண்டன் குரல்

ஆசிரியர்: த ஜெயபாலன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK


செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

செப்ரம்பர் 30ல் "ராணி" குடும்பப் பத்திரிகையில் வெளிவந்த பேட்டி.

# முதல் பார்வையிலே பிரபாகரனிடம் என்னைப் பறிகொடுத்தேன்

## மனைவி மதிவதனி உருக்கம்



பருத்திச் சேலை உடுத்தி பளிச் என குத்துவிளக்கு மாதிரி வசீகரமாய் இருக்கிறார் மதிவதனி. விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மதிப்பிற்குரிய மனைவி மதிவதனி. கனிவான பேச்சும் புன்னகை பூக்கும் முகமுமாக இருந்தாலும் அவரிடம் அடிக்கடி இழையோடுகிறது வேதனையின் சாயல்.

### படுசுட்டி

"நான் ஈழத்துப் பெண்மணி. புங்கத்தீவு பகுதியில் உள்ள மடத்துவெளி கிராமத்தில் பிறந்தேன். என் அப்பா ஏராம்பூ பள்ளிக்கூட ஆசிரியர். அம்மா சின்னம்மாள் குடும்பத் தலைவி. எங்கள் வீட்டில் நான் (மதி), தேவி அக்கா, கிரீதரன் அண்ணா, குட்டித் தம்பி பாலச்சந்திரன் என்று 4 பேர்.

நான் படிப்பில் படுசுட்டி. நீ படித்து டாக்டராக வர வேண்டும் என்று அப்பா அடிக்கடி சொல்வார். ஆனால் எனக்கு விவசாயத்தில் தான் ஆர்வம் இருந்தது. எங்களுக்கு ஊரில் நிலம், நீச்சு இருந்ததால் வேளாண்மைத் துறையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்கிற உத்வேகத்துடன் இருந்தேன். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் டாக்டருக்குப் படிக்க எனக்கு இடம் கிடைத்த போதிலும் அதைப் புறந்தள்ளிவிட்டு பெராதேனியா கல்லூரியில் வேளாண் அறிவியல் படிப்பில் சேர்ந்தேன்.

நான் 2ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த போது தான் இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டது. இதில் எங்களுடைய விளை நிலங்கள் எல்லாம் பாழாய்ப் போயின. என் இளம்பிராய கனவுகள், கற்பனைகள் எல்லாம் கருகி கலைந்து போன தருணம் அது" என்றபடி விழிகளில் ஈரம் கசிய பேசுகிறார் மதிவதனி.

### காதல்

இலங்கையில் தமிழர், சிங்களவர் இடையே மோதல் தீவிரமானதை அடுத்து விடுதலைப் போராளிகள் அவசர அவசரமாக நான், வினோஜா, ஜெயா, லலிதா, ஆகிய 4 இளம் பெண்களை சென்னைக்கு அனுப்பி வைத்தனர்.

எங்களுக்கு பாலசிங்கம் அண்ணாவின் திருவான்மியூர் இல்லத்தில் தஞ்சம் கிடைத்தது. நாங்கள் அங்கு சமையல் வேலைகளில் ஈடுபட்டு வந்தோம். தலைவர் பிரபாகரன் அப்போது சென்னையில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்கி இருந்தார். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு இராணுவ பயிற்சி மும்முரமாக நடந்துகொண்டு இருந்தது. தலைவர் போர் வியூகம் வகுப்பதற்காக அடிக்கடி பாலசிங்கம் அண்ணாவைத் தேடி வருவார். அப்போது நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டோம். முதல் பார்வையிலே அவரிடம் என்னைப் பறிகொடுத்தேன்.

### உறுதி

அவருக்கு இறால் குழம்பு என்றால் உயிர். நான் வைத்த இறால் குழம்பை விரும்பி சாப்பிடுவார். ஒரு தடவை ஹோலி பண்டிகையை ஒட்டி தலைவர் மேல் வண்ணத் தண்ணீரை ஊற்றுவதற்காக நான் வாளியோடு ஓடிய மகிழ்ச்சியான தருணங்களை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது.



என உதடு பிரியாமல் மென்மையாகப் புன்னகைக்கிறார் மதிவதனி.

பிரபாகரன் மதிவதனி திருமணத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் மணமகள் குடும்பத்திலும் எதிர்ப்பு கிளம்பியது.

'நீ காதலிப்பவர் போராளி இயக்கத்தின் மாபெரும் தலைவர். அவருக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்' என்று மதிவதனியின் அப்பா எவ்வளவோ எடுத்துச் சொன்ன போதிலும் என் வாழ்க்கை இனி அவரோடு தான் தலைவருக்காக நான் எதையும் இழக்கத் தயார் என்றபடி காதலில் உறுதியாக நின்றார் மதிவதனி.

### புகுந்த வீடு சென்னை

"எனக்குத் தாய் வீடு ஈழம் என்றால் சென்னை புகுந்த வீடு மாதிரி. நான் அங்கு கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் வசித்தேன். எனக்கு திருவான்மியூரில் ஒவ்வொரு இடங்களும் அத்துப்படி. மருந்தீஸ்வரர் கோயிலுக்குப் போய் இருக்கிறேன். என் இஷ்ர செய்வம் திருப்போரூர் கந்தசாமி. எங்களின் திருமணம் கூட சென்னை திருப்போரூர் முருகன் கோவிலில் தான் நடந்தது. நானும் அவரும் பெசண்ட் நகர் கடற்கரையில் கைகோர்த்தபடி நடந்த காலங்கள் மறக்க முடியாதவை" என்கிறார் மதிவதனி.

### தலைமறைவு

பிரபாகரன் மதிவதனி தம்பதிக்கு முதல் ஆண்குழந்தை 1985ல் பிறந்தது. பெயர் சார்லஸ் அந்தோனி. விடுதலைப் புலிகளின் சிங்கமாக இருந்து சிங்கள இராணுவத்துடன் மோதி வீரமரணம் அடைந்த மாவீரனின் பெயர் அது. இரண்டாவது பெண் குழந்தை துவாரகா. இன்னொரு மகன் பாலச்சந்திரன்.

இலங்கையில் புலிகள் சிங்கள இராணுவம் இடையே கடந்த 1986 டிசம்பர் மாதவாக்கில் சண்டை தீவிரமாக இருந்த போது நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு கிளம்பிப் போனோம். அப்போது நிலமை எங்களுக்கு சாதகமாக இல்லை. விடுதலைப் போராளிகளோடு தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு அருகே உள்ள அலம்பில் காட்டுப் பகுதிக்குச் சென்றுவிட்டார். நான் எனது 2 குழந்தைகள், பெற்றோரோடு நல்லூரில் தலைமறைவாக இருந்தேன். அப்போது எங்களின் ஓட்டுமொத்த குடும்பத்துக்கும் பாதுகாவலனாக நின்றவன் என் தம்பி பாலச்சந்திரன். வன்னி மாவட்டம் புளியம்போக்கணை பகுதியில் இராணுவம் புகுந்ததாக தகவல் வந்ததும் "அக்கா ஈழத்துக்குள் இராணுவம் வந்துவிட்டது. நான் தலைவரின் ஆசியோடு அதை முறியடிக்கப் போகிறேன். போர்க்களத்தில் வீரனுக்கு நாளை என்பது உண்மையில்லை. நான் சாகிற வரையிலும் உங்களோடு இருக்க வேண்டும் என்று எனக்கும் ஆசை தான். ஆனால் குடும்பமா? ஈழமா? என்று கேள்வி வந்தால் எனக்கு ஈழம் தான் முக்கியம்" என்றபடி பிரியாவிடையோடு புறப்பட்டுப் போனான். நான் அவனை கடைசியாகப் பார்த்தது அன்று தான்" என்கிறார் கலங்கிய கண்களுடன் மதிவதனி.

நல்லூர் கந்தசாமி கோவிலில் குடும்பத்தோடு மதிவதனி பதுங்கி இருந்த போது இராணுவம் சுற்றி வளைத்தது. போலீஸ் கட்டுக்காவலை மீறி தனியொரு பெண்ணாக மதிவதனி அலம்பில் காட்டுக்கு கிளம்பிப் போனது திகில் கதை.

### ஆறுதல்

"நான் தலைவரோடு அலம்பில் காட்டுப் பகுதியில் பதுங்கி இருந்த ஒவ்வொரு நிமிடங்களும் எங்களுக்கு மறுஜென்மம் தான். சதா 24 மணி நேரமும் டமார் டமாரென குண்டுகள் வெடிக்கும். என் கண்ணெதிரில் பச்சை மரமொன்று எரிந்தபடி பறந்துபோய் விழுந்தது திகிலூட்டும் அனுபவம்.

எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்கிற கொதிப்பான சூழலில் என் தம்பி பாலச்சந்திரன் இராணுவத்துடன் நடந்த போரில் வீரமரணம் அடைந்ததாக தகவல் வந்தது. நான் பதறித் துடித்தேன். கதறி அழுதேன். எங்களின் மூன்றாவது மகன் பாலச்சந்திரன். அவன் உருவத்தில் இப்போது என் தம்பியைப் பார்க்கிறேன்" என ஆறுதல் பட்டு பேசுகிற போதே மதிவதனியின் விழிகளில் சொல்ல முடியாத சோகத்தின் பிரதிபலிப்பு.

### விடியல் நிச்சயம்

"இலங்கையில் ஈழத்தமிழர்கள் ஒவ்வொரு நிமிடமும் செத்துப் பிழைக்கிறார்கள். அனைவரின் வீட்டிலும் மரணத்தின் நிழல் படிந்து கிடக்கிறது. துப்பாக்கிச் சூடு முதல் கற்பழிப்பு வரை மனித உரிமையின் நகக் கண்களில் நித்தமும் குத்தீட்டிகள் பாய்ச்சப்படுகின்றன. எங்களுக்கு இப்போதைக்கு இருட்டுத் தான் நிரந்தரம். பிரபாகரன் என்கிற விடிவெள்ளியின் வெளிச்சத்தோடு விடியலைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். விடிவெள்ளி ஒரு நாளில் நிச்சயம் பௌர்ணமி ஆகும். அப்போது ஈழத்துக்கு நிச்சயமாக விடிவெள்ளி பிறக்கும்" என முடித்த போது மதிவதனியின் வார்த்தைகளில் அடர்ந்த உறுதியும் அதீத நம்பிக்கையும் பளீரிட்டன.

இந்நேர்காணல் எங்கு எவ்வாறு எடுக்கப்பட்டது என்ற தகவல் எதுவும் வெளியிட்டிருக்கப்படவில்லை.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசம் சஞ்சிகையின்**

# தலித் சிறப்பிதழ்

**முதலாவது தலித் மாநாடு ~ பாரிஸ் ~ 20 - 21 ஒக்ரோபர் 2007**

# சாதியைக் காப்பாற்றும் பல சாதி அபிமானிகளுக்கு எச்சரிக்கை !

~ சேனன் ~

இன்று சாதியம் பற்றி, குறிப்பாக புலம்பெயர் சமூகத்திற்குள் சாதியம் பற்றி பேசுவது பல்வேறு வகை கோபங்களை கிளறும் என்பது தெரிந்ததே.

தமிழ் சமுதாயத்திற்குள் ஊறி உறைபட்டுக்கிடக்கும் சில ஊத்தைகளை பற்றி ஒருசொல் அங்க இங்க பேசப்படும்போது உலகின் அனைத்து புனிதங்கிளினதும் பெயரில் எதிர்ப்புக் கிளம்பி அடி விழுவது வழமையாக நடக்கிறது. எங்காவது மூலைக்கு மூலை முனகுபவர்கள் கூட கூச்சப்பட்டு ஒதுங்கும்படி காழ்ப்போடு ஒதுக்கப்படுகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்திற்குள்ளும் மேலாதிக்க (வர்க்க, சாதிய) சிறுபான்மை செல்வாக்கு செலுத்தி வருவதன் வெளிப்பாடே இது.


'இல்லாத கதை பேசி சும்மா தாமே என்றிருக்கும் சமுதாயத்தையும் கெடுக்க முற்படுகிறார்கள்', 'இதென்ன புதுக்கதை', 'இப்படியும் நடக்குமோ', 'ஏன் தேவையில்லாம பிரச்சினைகளை இழுக்கிறாய்', என்ற குரல்கள் முதற்கொண்டு, 'வெளிநாட்டில இந்தப்பிரச்சின இல்லை' என்று அடித்துக்கூறி சூட்சுமமாக விதண்டாவாதம் செய்பவர்கள் உட்பட அனைவரும் சுய சாதிய, வர்க்க நலன்களுக்காக செயற்படுபவர்களாகவே இருக்கிறார்கள்.

வெளியில் பயந்து பாசாங்கு காட்டும் வெள்ளாள அறிவிலி மடச்சாம்பிரானிகளின் ஆக்கினைகள் பல லண்டனில் நடந்து வருகிறது.

உதாரணமாக 'காரைநகர் நலன்புரிச்சங்கம்' என்று இயங்கும் ஒரு அமைப்பை சொல்லலாம். இவ்வமைப்பு காரைநகர் மேலாதிக்க வெள்ளாளரின் புகலிடமாக கடந்த 20-25 வருட காலமாக இயங்கிவருகிறது. காரைநகரில் அதிகம் வாழும் ஒடுக்கப்படும் சாதியினரை புறக்கணிக்கும் இச்சங்க மேலாதிக்க வெள்ளாளர் அப்படியே ஊர் மேலாதிக்க பழக்கங்களை இங்கும் தொடர்கின்றனர்.

காரைநகர் சாதிய கொடுமைகளின், அதற்கு எதிரான போராட்டங்களின் களமாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. காரைநகர் தண்ணிப் பிரச்சினை இதற்கு ஒரு முக்கிய காரனமாக இருந்து வந்திருக்கிறது. இது பற்றி அறிவது இங்கிலாந்துக்கும் கடத்தப்பட்டு இருக்கும் மேலாதிக்க நடவடிக்கைகளை புரிந்துகொள்ள உதவும்.

காரைநகரில் அந்தந்த சாதியினர் தமக்கென்றிருக்கும் கிணறுகளில் மட்டுமே தண்ணி அள்ளுவது பழக்கத்தில் இருந்து வருகிறது. இருப்பினும் பெரும்பான்மையான நல்ல தண்ணிக் கிணறுகள் வெள்ளாளரின் வயல்களிலேயே இருக்கின்ற காரணத்தால், அந்த வயல் கிணறுகளுக்கு ஒடுக்கப்படுபவர்கள் தண்ணி எடுக்கச் செல்வது வழக்கம். இவர்கள் அங்கு தண்ணி பெற்றுக்கொள்ள முடியுமே அன்றி தண்ணி அள்ள முடியாது. குடங்களுடன் அங்குபோய் வரிசையில் நின்றால் ஆதிக்க சாதியினர் முட்டாமல் தட்டாமல் தண்ணி ஊத்தி விடுவினம். மற்றபடி, ஒடுக்கப்பட்டவர்கள் தண்ணி அள்ள அங்கு அனுமதியிலை. இதில் கேவலமான விசயம் என்னவென்றால் இந்த கினறுகளில் பெரும்பாலானவை -அவை மேல்சாதியினரின் வயல்களுக்குள் கிடந்தாலும்- அரசாங்கத்தால் கட்டப்பட்டவை. இந்த பொதுக் கிணறுகள் தங்கள் வயல்களுக்குள் கிடப்பதால் வெள்ளாளர் அதைச்சுத்தி வேலிபோட்டு சொந்தம் கொண்டாடுவது காரைநகரில் அனைவருக்கும் தெரிந்த ஒன்று.



அதிகமான பிரச்சினைகள் வெடிப்பது வறட்சிக்காலத்தில்தான். வெள்ளாளர் பெரிய பெரிய பீப்பாய்களை கொண்டுவந்து வயல் கிணறுகளில் தண்ணி அள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். 60, 70 பேருக்கும் மேலாக வரிசையில் நிற்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களாக இரக்கப்பட்டு ஊத்திவிட்டால்தான் உண்டு. இத்தருணங்களில் சண்டைகள் தொடங்கும்.

தண்ணி எடுக்கும் இடத்தில் நித்தமும் நிகழும் சச்சரவுகள் மாதிரியன்றி இந்த சண்டைகள் பெரிதாக வளரும்.


உதாரணமாக 1977ம் ஆண்டு ஈஸ்டர் மாதம் ஏற்பட்ட கொந்தளிப்பை சொல்லலாம். ஈஸ்டர்காலம் ஒடுக்கப்பட்ட பல கிறித்தவ மக்களின் முக்கிய காலம்.

காத்து காத்து நின்று பீப்பாய்களில் தண்ணி போய் கிணறு வற்றும் போக்கு பொறுக்க முடியாமல் ஒடுக்கப்பட்ட மக்கள், தண்ணி ஊத்தி விடும்படி காத்துக்கொண்டு நிற்காமல் அள்ளிக் கொண்டுபோக வெடிச்சது பிரச்சினை.

வெள்ளாளர் அல்லோல கல்லோலப் பட்டினம். மற்றக் கிணறுகளில் தாரை ஊற்றி தண்ணியை கெடுத்தினம். கிணத்தச் சுத்தி முள்ளுக்கம்பி வேலிய கட்டிச்சினம். சனம் அத புடுங்கிப் போட்டு தண்ணி எடுக்குது என்று காவலுக்கும் ஆள் வைச்சினம். இவை முள்ளுக் கம்பி வேலிபோட்டு காவலுக்கும் ஆள்வைச்ச இந்த கினறுகளில் பெரும்பான்மையானவை காரைநகர் கிராம சபையால் கட்டப்பட்டவை. (காரைநகர் கிராம சபையின் மேலாதிக்கமும், முன்னால் MP தியாகராசா தண்ணியை டாங்கில ஏத்தி லைன் போட்ட பின்னனிகளை அடுத்த லண்டன் குரலில் பார்க்கலாம்).

இந்த பிரச்சினை கன இடங்களில் வெடிச்சு பெரிதுபட்டுக்ககொண்டே போன போது, திலீபன், குமரப்பா என்று பலரும் வந்து பெரிய கூட்டங்கள் வைக்க நேர்ந்தது. 'இதை முதன்மைப்படுத்த வேண்டாம்' என்று சமாதானம் செய்ய வெளிக்கிட்ட கதையும் இத்தருணத்திலேயே நிகழ்ந்தது. தண்ணிக்கு வழியில்லாத பெரிய அடிப்படை பிரச்சினையில் இருந்த மக்களிடம் வந்து இந்த பிரச்சினையை - அடிப்படை மனிதாபிமான பிரச்சினையை - பெரிதுபடுத்த வேண்டாம். முதலில் நாட்டுப் பிரச்சினையை பார்ப்பம் என்று கூட்டம் போட்டு கதைக்க வெளிக்கிட்டதற்கு ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் போனது ஆச்சரியமான விசயமில்லை.

இந்தமாதிரி பிரச்சினைகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருந்தது. இப்பொழுது கூட பல பொதுக் கிணறுகளை சுத்தி வேலிகட்டப்பட்டு உள்ளது. தற்சமயம் நேவிக்காரன் தண்ணியை எடுத்துச் செல்வதால் மேலும் பற்றாக்குறை ஏற்பட்டதால் வெளியில் இருந்து தண்ணி கொண்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கு.



காரைநகர் நலன்புரி சங்கத்தார் தம்காசில் வெளியில் இருந்து பௌசரில் தண்ணி கொண்டு வந்து சனத்துக்கு கொடுக்க பண உதவி செய்கிறார்கள். அதற்கு ஆதாரமாக வண்டியை தள்ளிக்கொண்டு நின்று படம் எடுத்துக்கொண்டு வந்து லண்டனில் படம் காட்டுகிறார்கள். தண்ணிக்கு வழியற்ற சனத்துக்கு ஏதோ ஒரு வழியில் தண்ணி கிடைப்பது சரிதான். இவர்களது 'இரக்க சுபாவத்தாலும், தருமத்தாலுமே' மக்களுக்கு தண்ணி கிடைப்பதாக நிறுவ முயலும் இவர்தம் மேலாதிக்க பாவனைகளைத்தான் பொறுத்துக்கொள்ள முடியாது.

இதே நலன்புரிசங்க்ககாரர் பழைய காரைநகர் தண்ணி பிரச்சினைகளில் மும்முரமாக நின்றவர்கள். இன்று ஒடுக்கப்பட்ட இடங்களுக்கும் தண்ணிகொடுப்பதாக இவர்கள் காட்டும் பாவனை பழைய 'கொடுக்கும்' மேலான்மையை மீண்டும் நிறுவவே.

நேவிக்காரனால் உப்பாகிப்போன கிணறுகளுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு 20 ரூபாயோ சொச்சமோ கொடுத்து தண்ணி கிடைப்பது பெருங்காரியம். இந்த நலன்புரி சங்கம் இல்லாவிட்டால் இது நடக்குமோ என்று கேட்பவர்கள் சிந்திச்சு பார்க்க வேண்டும். இவர்கள் தமது சொந்த காசை கொண்டுபோய் இந்த வேலை செய்யவில்லை. இது சங்கக் காசு. இந்த சங்கக் காசு பெரும்பாலும் மேல்சாதியினரிடம் இருந்து வருகிற காரணத்தால் மேலாதிக்கத்தை நிறுவும் பணிகளுக்கே செல்கின்றன. உதாரணமாக காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இக்காசு போகிறது. இப்பாடசாலையில் கிட்டத்தட்ட 70 பதுகள் வரை பிற்படுத்தப்பட்ட சமூகத்து மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பின்பும் பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் அங்கு பணிபுரிய முடியாத நிலையே அங்கு நிலவி வருகிறது. முன்பு இப்பாடசாலை அதிபராக வரவேண்டிய டானியல் மாஸ்டருக்கு நடந்த பிரச்சினைகளை காரைநகர் வாசிகள் அறிவர். இவரின் கலகம் தாங்க முடியாமல் வேறு வழியின்றி காரை சுந்தரம்பிள்ளையை அதிபராக போட்டு

(தொடர்ச்சி 6ம் பக்கத்தில்)

# பிரித்தானிய இந்துக்கள் மத்தியில் சாதியப் பாகுபாடும் ஒடுக்கு முறையும்

~ த ஜெயபாலன் ~

சாதியப் பாகுபாடுகள் பிரித்தானிய இந்துக் கள் மத்தியில் பொதுவாக காணப்படுவதாக தலித் சொலிடாரிட்ரி நெற்வேக் என்ற அமைப்பு குற்றம்சாட்டியு உள்ளது. குறைந்தது 50,000 தலித் மக்கள் பிரித்தானியாவில் வாழ்வதாக மதிப்பிட்டுள்ளது.

பள்ளிச் சிறுவர்கள் மத்தியிலும் இப்பாகுபாடு காணப்படுவதாக குற்றம்சாட்டி உள்ள இவ்வமைப்பு பெற்றோர்களினாலேயே இது பிள்ளைகளுக்கு ஊட்டப்படுவதாகத் தெரிவிக்கிறது. உயர்சாதி பிள்ளைகள் மற்றவர்களை chammear அல்லது chuhrha அல்லது சூத்ரா (பறையா எனக் கூறுவதற்கு ஒப்பானது) என்று அழைக்கின்றனர் எனவும் தலித் சொலிடாரிட்ரி நெட்வேக் தெரிவிக்கிறது.

தலித் சமூகத்தவரான கவுன்சிலரும் முன்னால் மேயருமான ராம் லக்கா இது பற்றித் தெரிவிக்கையில் தான் உயர்சாதியினர் வாழும் பகுதிக்கு தொலைவில் சென்று போட்டியிட்டதால் தான் தன்னால் கவுன்சிலராக வெற்றி பெற முடிந்ததாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஆங்கில நகரங்களில் உள்ள மந்தீர்கள் (கோவில்கள்), குருத்துவராக்கள், பள்ளிவாசல்கள் எல்லாம் வெவ்வேறு சாதியப் பிரிவுகளால் நிர்வகிக் கப்படுவதாகத் தெரிவித்தார்.

இதே மாதிரியான பாகுபாடும் ஒடுக்கு முறையும் ஐரோப்பியத் தமிழர்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

தமிழர்கள் தம் தாயகத்தைவிட்டு புலம் பெயரும் போது தமது கலாச்சாரத்தின் எச்சசொச்சங்களாக இருந்த சாமிகளையும் விமானத்தில் ஏற்றி புலம்பெயர வைத்தனர். ஆரம்பத்தில் photo feame ஆக 2D ல் வந்த இந்தச் சாமிகள் இப்போது 3Dல் சிலைகளாக வருகின்றனர். இவ்வாறு வரும் சாமிகளும் சிவன், பிள்ளையார், முருகன், மஹாலக்ஸ்மி என உயர்சாதிச் சாமிகளாகவே உள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களின் சாமிகளான வைரவர், நாச்சிமார், காளி ஆகிய சாமிகள் ஒன்றும் மேற்குலகிற்கு புலம்பெயர வில்லை. ஏனென்றால் அவர்களை வழிபட்டவர்களால் பெரும்பாலும் புலம்பெயர முடியவில்லை.

மேற்கு நாடுகளின் தமிழ் வீடுகளில் பெற்றோர் கோப்படும் போது பிள்ளைகளை யும் வேண்டாதவர்களையும் பறையா என்று ஏசுவது அன்றாட நிகழ்வாகக் காணப்படுகிறது. சாதிய முறையில் ஒடுக்கப்பட்டவர்கள் புலம்பெயர்வதற்கான பொருளாதார வாய்ப்புகள் இல்லாதபடியால் அவர்களது ஐரோப்பிய புலம்பெயர்வு என்பது மிக அரிதானதாகவே உள்ளது. அவ்வாறு புலம்பெயர்பவர்களும் உயர்சாதித் தமிழ் சமூகத்துடன் அந்நியப்பட்டே வாழ வேண்டி உள்ளது.

புலம்பெயர்நாடுகளில் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவுகள் மிக மிகச் சிறுபான்மையாகவே உள்ளனர். இவர்களும் சிறுசிறு குழுக்களாக வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்றனர்.


அண்மையில் சர்ச்சைக்கு உள்ளான கரை வெல்பெயர் சொசைட்டியின் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று அவ்வமைப்பு சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் உள்வாங்கத் தவறியது என்பதாகும்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்: மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம்

எம் திருநாவுக்கரசு
(உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்)



யாழ் மண்ணிலே காலம் காலமாக சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பல போராட்டங்கள் தோண்றி அடங்கியும் அடக்கப்பட்டும் வந்தது வரலாறு. இதில் குறிப்பிடத்தக்கது 1968ம் ஆண்டு வடபகுதியில் சாதி அமைப்புத் தகரட்டும்! சமத்துவ நீதி ஓங்கட்டும்! என்ற கோஷங் களை முன்வைத்து, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டம். தனது முதல் போராட்டத்திற்கு சுண்ணாகம் சந்தியில் இருந்து யாழ் முற்றவெளி வரை ஊர்வலம் செல்வதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆயத்தமானது.

அன்று மாவோயிஸ்டுகள் என்று அழைக்கப்பட்ட சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவுடன் அது இயக்கமாக வளர்ந்தது. தோழர் சண்முகதாசன் தலைமையில் இயங்கிய கட்சியில் வட பிரதேச அமைப்பாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம், தோழர் டானியல், தோழர் வி. ஏ கந்தசாமி, தோழர் கா. செந்திவேல், தோழர் சு, இளங்கீரன், தோழர் இக்பால் போன்றோர் முன்னணியில் இருந்தனர். அன்று நடத்தப்பட இருந்த ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளதாக போலீசும் அறிவித்தது. மீறிச் செல்ல முற்பட்ட போது கலகம் ஏற்பட்டது. இதில் தோழர் வீ. ஏ கந்தசாமிக்கு ஒருவன் அடிக்க எத்தனித்த போது கே. ஏ. சுப்பிரமணியம் அவனது தடியைப் பறிக்க மோசமான கைகலப்பு ஏற்பட்டு கூடம் சிதறியது. மண்டை பிளந்தவர்களும் கை கால் உடைந்தவர்களும் ஏராளம். சந்தைக்கு உள்ளும் தோட்ட வெளிகளிலும் மக்கள் சிதறி ஓடினர். கந்தசாமி, சுப்பிரமணியம், செந்திவேல் போன்றோருக்கு மோசமான காயங்கள். எதிர்த்தரப்பிலும் கணிசமான பேருக்கு கல்லெறிக் காயங்கள்.

இச்சாதி அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் முஸ்லீம் தோழர்களும் பங்கு பற்றினர். அத்தோடு கூடிய பாகம் மேல் சமூகத்தைச் சேர்ந்தவர்களே அடியுதை வாங்கிக் கொண்டனர்.

கண்ணீர் புகைக்குண்டும் குண்டாந்தடியும் தாராளமாகப் பாவிக்கப்பட்டது. கலகத்தை அடக்க பாதுகாப்புப் படையும் உதவிக்கு அழைக்கப்பட்டது. கலகம் ஓரளவுக்கு ஓய்ந்தபின் மக்கள் கும்பல் கும்பலாக நின்றார்கள். சிறிது நேரத்தின் பின் கொழும்பில் இருந்து விமானத்தில் வந்திறங்கிய தோழர் சண்முகதாசன் எடுத்துக் கொண்ட முயற்சியால் மாலை 2 மணியளவில் ஊர்வலம் மௌனமாகவும் 2 பேர் வரிசையிலும் செல்லலாம் என அனுமதி கிடைத்தது.

ஊர்வலத்தில் சுமார் 10 யார் இடை வெளிக்கு ஒன்றாய் படையினர் வாகனம் செல்ல ஊர்வலம் ஆரம்பமாகியது. தெல்லிப்பளை ஊடாகச் செல்லும் போது முன்னறிவித்தல் கிடைத்தமையால் வழியில் உள்ள கோவில்கள் எல்லாம் பூட்டப்பட்டது. சிலர் என்ன ஊர்வலம் என்று கேட்ட போது திருச்செல்வத்தின் சவ ஊர்வலம் என்றும் அவருக்கு எதிரான கோஷங்களும் கூட்டத்தில் எழும்பி இதற்கு எச்சரிக்கை விடப்பட்டது. இறுதியில் முற்றவெளியை அண்டிய போது பலத்த மழை பெய்யத் தொடங்கியது. பாதுகாப்புக்கு வந்தவர்கள் சென்றுவிட்டனர். மக்கள் ஆரவாரம் கட்டுமீறியது. சகலருக்கும் எதிராகவும் சாதி அமைப்புக்கு எதிராகவும் கூட்டத்தினர் கண்டனக் கோஷங்களை எழுப்பினர்.

சுமார் 8 மணியளவில் கூட்டம் ஆரம்ப மாகியது. பலர் உரையாற்றினர். தோழர் சண்முகதாசனின் உரை மிகவும் காரசாரமாக இருந்தது. காலையில் அவர்கள் நடந்துகொண்ட விதம் பற்றி மிக மூர்க்கமாக கண்டித்துப் பேசினார். கூட்டத்தில் உள்ள மக்களையும் காவலர்களையும் ஒப்பீடு செய்து பேசும் போது பத்து பதினைந்து பேருக்கு ஒருவரே உள்ளனர் என்றும் இவர்கள் போராடத் துணிந்தால் அவர்கள் நிலை என்னவாகும் என்றும் குறிப்பிட்டார். பின்பு அவரது இப்பேச்சை வைத்து கலகம் விளைவிக்க எத்தனித்தார் என்ற அடிப்படையில் வழக்கு நடைபெற்று அது தள்ளுபடி செய்யப்பட்டது.

இக்கால கட்டங்களில் பல ஊர்களிலும் பொது உணவு விடுதிகள், பொதுக் கோவில்கள், கிணறுகள் என்பவற்றில் பலவந்தப் பிரவேசங்கள் நடைபெற்றனர். இதில் குறிப்பிடத்தக்கது மாவிட்டபுரம் கந்தசாமி கோவில். அங்கு ஆலயப் பிரவேசத்தை தடுப்பதற்கு அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார். அக்காலத்தில் அவர் ஒரு மாணவன். சுந்தரலிங்கம் காங்கேசந்துறைப் பொலிஸ் அத்தியேட்சகராக இருந்தது அவருக்கு வாய்ப்பாகிவிட்டது.

திருவிழாத் தொடங்கியவுடன் வெளிக் கதவுகள் பூட்டப்பட்டுவிட்டன. கோவிலைச் சுற்றிப் பலமான காவல். கோவிலின் வெளிக்கிணறும் முள்ளுக் கம்பியடித்து மூடப்பட்டது. அதற்கு ஒரு படலை. அதுவும் பூட்டப்பட்டு இருக்கும் ஆலயத் திருவிழாவுக்கு வந்த சனங்களுக்கு கம்யூனிஸ்டுகள் கோவிலில் குழப்பம் ஏற்படுத்த முனைவதால் தான் கோவில் பூட்டியுள்ளது என்றும் அதனால் இந்த முறை வெளியிலே நின்று கும்பிட்டுச் செல்லும்படியும் சுந்தரலிங்கத்தால் பிரச்சாரம் செய்யப்பட்டது. தொடர்ந்து வெகுஜன

தொடர்ச்சி 6ம் பக்கத்தில்

# சாதியப் போராட்டம் சில நினைவுகள்

~ என் சண்முகதாசன்

(தோழர். சண்முகதாசன் அவர்கள் எழுதிய 'ஒரு கம்யுனிசப் போராளியின் அரசியல் நினைவுகள்' என்னும் நூலில் சாதீயப் போராட்டம் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.)

சாதி அமைப்பு என்பது இலங்கை முழுவதிலும் சிங்களவர், தமிழர் இருசாரார் மத்தியிலும் இருந்து வருகின்றது. ஆனால் வடக்கில் உள்ள தமிழர்களைப் பொறுத்த வரையில் இதனுடன் தீண்டாமை என்ற நாசமும் சேர்ந்து இருக்கின்றது. அங்கு சில சாதிகள் தீண்டத்தகாத சாதிகளாக கருதப்படுகின்றன. ஆவர்கள் மனிதர்களாகவே கருதப்படவில்லை. சமுதாயத்தின் கீழ்தட்டில் அவர்கள் கிடந்து நசிகின்றார்கள். ஆவர்கள் உயர் சாதியினரின் வீடுகளுக்குள் செல்ல முடியாது. அவர்களுடன் ஒன்றாக கலந்து பழக முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களுடன் கலந்து திருமணம் செய்து கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக் கிணறுகளில் இருந்து தண்ணீர் அள்ள முடியாது. ஒரே கிண்ணத்தில் தேநீர் பருக முடியாது. மிகவும் மோசமானது என்னவென்றால் கடவுளைக் கும்பிடக்கூட கோயிலுக்குள் அவர்கள் செல்ல முடியாது. தீண்டாமை என்பது மனிதன் மனிதனுக்குச் செய்யும் மிக மோசமான கொடுமை என்று உண்மையில் கூறமுடியும்.

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் இச்சாதீய அடக்குமுறைக் கொடுமைகளுக்கு எதிராக திரண்டெழுந்து பல கிளர்ச்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால் இவை கடுமையாக அடக்கி ஒடுககப்பட்டன. சாதி அடக்குமுறைகள் சிலவற்றின் காட்டுமிராண்டித்தனத்தை உண்மையில் நம்ப முடியாது. கிளர்ச்சி செய்யத் துணிந்த தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் உடனே தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களுடைய கிணறுகளில் நஞ்சு ஊற்றப்பட்டது. காணிகளில் இருந்து அவர்கள் துரத்திக் கலைக்கப்பட்டனர். (தீண்டத்தகாதவர்களுக்கு பெரும்பாலும் சொந்தமாக காணி இருக்க வில்லை). மார்புக்கு மேல் மறைக்கத் துணிந்த தாழ்த்தப்பட்ட பெண்களின் சட்டைகள் கத்தியால் கிழித்தெறியப்பட்டன. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஆண்கள் தோளில் சால்வை போட அனுமதிக்கப்பட வில்லை. சால்வை போட்டால் உயர் சாதியினரைக் கண்டதும் அவர்கள் அதனை அகற்ற வேண்டும்.

இடதுசாரிக் கட்சிகளின் திரிபுவாதம் சீர்திருத்தவாதம் ஆகியவற்றால்தான் இந்த மிருகத்தனமான சமூக ஒழுங்கிற்கு எதிரான போராட்டம் சரியாக நடத்தப்படவில்லை. உயர் சாதியினர் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருக்கின்றபடியால் எந்தப் பாராளுமன்றக் கட்சியும் அவர்களைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. இந்த நிலைமை எமது மார்க்சிய - லெனிய கம்யுனிஸ்ட் கட்சியின் தோற்றத்துடன் மாறியது. எமது கட்சி பாராளுமன்றத்தின் மூலம் சோசலிசத்தை அடையலாம் என்ற கருத்தை நிராகரித்தது. பாராளுமன்ற திரிபுவாதம் என்ற சகதியில் அதன் தலை புதைந்து இருக்கும் வரை ஒரு கட்சி எந்த வெகுஜனப் போராட்டத்திற்கும் வெற்றிகரமாக தலைமை தாங்க முடியாது என்பதை எவரும் இலேசாகப் புரிந்து கொள்வார்கள். பாராளுமன்ற சந்தர்பவாதம் என்ற திரிபுவாத தளையில் இருந்து விடுபட்ட நாம் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு துணிவான தலைமை கொடுக்க முடிந்தது.

1966ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜன இயக்கம் கம்யுனிஸ்ட் கட்சியின் தலைமையில், சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தியது. முற்றவெளியில் இந்த இயக்கத்தின் நோக்கங்களுக்கு ஆதரவாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற இருந்தது. பொலிசார் ஊர்வலத்தை தடுத்து நிறுத்தினார்கள். பொலிசார் எப்பொழுதும் தாழ்த்தப்பட்ட மக்களின் எந்த இயக்கத்தையும் நசுக்கினார்கள் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதற்குக் காரணம் பொலிசாரும் உயர் சாதியினர் என்பதே. ஆனால் ஊர்வலக்காரர்கள் கலைய மறுத்தார்கள். இறுதியில் ஒரு வரிசையில் யாழ்ப்பாணம் செல்ல பொலிசார் அவர்களை அனுமதிக்க வேண்டியதாயிற்று. முற்ற வெளியில் மிகுதியும் வெற்றிகரமான கூட்டம் ஒன்றை நாம் நடத்தினோம். இக் கூட்டத்தில்தான் புகழ் பெற்ற அமெரிக்க நீக்ரோ பாடகர் போல் போப்சனுக்கு அவருடைய சகோதரர் கூறிய புத்திமதியை நான் மேற்கோள் காட்டினேன். "ஒருபோதும் அடிபணிந்து போகாதே. ஏதிர்த்து நின்று அவர்கள் அடிப்பதிலும் பார்க்க கடுமையாக அடி. அவர்கள் படிப்பினையைப் பெற்றதும் விடயங்கள் வித்தியாசமாக இருக்கும்."

சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான இயக்கம் சில வெற்றிகளைப் பெற்றது. பல ஆலயங்கள் திறக்கப்பட்டன. பல இடங்களில் தேநீர் கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி கிடைத்தது. மாவிட்டபுரம் கோயிலுக்குள் பிரவேசிப்பதற்கான போராட்டம் இவற்றில் முக்கியமானது. யுாழ்ப்பாணத்தில் உள்ள இந்த பிரசித்தி பெற்ற கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதைத் தடுக்க உயர்சாதியினர் அழுங்குப் பிடியாக நின்றார்கள். ஆவர்கள் இந்த ஆலயத்தின் உள் மண்டபத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கம்பிகள் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களை தடுத்து நிறுத்தும் அளவிற்குச் சென்றார்கள். கொஞ்சக் காலம் அவர்கள் ஆலயத்தை மூடி வைத்திருந்தார்கள். ஆனால் உயர் வருமானம் பெறும் இந்த ஆலயத்தை அவர்கள் நீண்ட காலம் பூட்டி வைக்க முடியவில்லை. இறுதியில் மக்கள் நெருக்கத்தினாலும் நேரடிப் பேராட்டத்தினாலும் இந்த ஆலயத்தின் கதவுகள் திறக்கப்பட்டன.

தாழ்த்தப்பட்ட மக்களின் இந்த போராட்டத்திற்கு ஆதரவாகப் பல வடிவக் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அற்புதமான பாடல்கள் பல தோன்றின. நூற்றுக்கு மேலான தடவை அரங்கேற்றப்பட்ட கந்தன் கருணை என்ற சிறப்பான நாடகம் ஒன்றை எமது தோழர்கள் தயாரித்தளித்தார்கள். உயர்சாதியினர் இந்த நாடகத்தை எதிர்த்தார்கள். இந்த நாடகம் பெரும் வெற்றியாகியது. கொழும்பில் கூட அது பல தடவை அரங்கேற்றப்பட்டது. புரட்சிகர கலை எப்படி பரட்சிகர இயக்கத்தை முன்தள்ளிவிட முடியும் என்பதற்கு அது நல்லதோர் உதாரணம் ஆகும். புரட்சிகர நடைமுறையின்றி புரட்சிகர கலை பிறக்காது என்பதையும் அது தெளிவாக்கியது. நடைமுறைதான் பிரதானமானது. ஆனால் புரட்சிகர நடைமுறையில் இருந்து தோன்றும் புரட்சிகர கலை புரட்சிகர இயக்கத்தை மேலும் முன்தள்ளிவிட உதவுகின்றது. சூன்யத்தில் நாம் புரட்சிகர கலையை உருவாக்க முடியாது. புரட்சிகர இயக்கத்தின் அங்கமாக அது உருவாகின்றது.

சாதி அமைப்பு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான எமது கட்சியின் இயக்கம் அதன்



சாதியப் போராட்டத்தை முன்னெடுத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என் சண்முகதாசன்.

மாபெரும் சாதனைகளில் ஒன்றாகும். ஆதனை ஒட்டி நாம் என்றும் பெருமைப்படுவோம். அது வடக்கு இலங்கையில் உள்ளுர் நிலைமைகளுக்கு ஏற்ப மார்க்சிய-லெனியத்தை பிரயோகம் செய்ததாகும். இதனால் ஆயிரக்கணக்கானோர் புரட்சிப் பாதைக்கு வந்தார்கள். சகல பகுதி மக்கள் மத்தியிலும் (வடக்கிலும் தெற்கிலும்) இதனால் கட்சியின் செல்வாக்கு பரவியது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சாதியில் கணிசமான தொகையினர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும். உழவர்களும் உழைப்பாளிகளும் அவர்கள்தான். அவர்கள் உடல்ரீதியிலும் பலமானவர்கள். இதனால்தான் யாழ்ப்பாணத்தில் எமது கட்சி ஒழுங்குபடுத்திய எமது கூட்டத்தை எவராலும் குழப்ப முடியவில்லை. இந்த நம்பிக்கையில்தான் நான் பின்னர் 1975இல் சுன்னாகம் சந்தைக்கு முன்னால் பொது மேடையில் மானிப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கத்துடன் பகிரங்க விவாதம் நடத்தினேன். தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் தொகையில் கூடுதலானவர்கள். ஆனால் எம்மை யாரும் தொட்டுவிடமுடியாது. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பலர் எம்முடன் இருந்ததுதான் எமக்குக் கிடைத்த பாதுகாப்பாகும்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசத்தின் பார்வை: சாதியம்

தமிழீழப் போரட்டத்திற்குப் பின் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஏனைய முரண்பாடுகள் அனைத்தும் பின்னுக்குத் தள்ளப்பட்டு தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான முரண்பாடு மட்டுமே கவனத்திற்கொள்ளப்பட்டது. அதனால் சாதிய ஒடுக்குமுறை, முரண்பாடுகள் யாவும் பின் தள்ளப்பட்டது.

கடந்த கால்நூற்றாண்டு கால தமிழீழப் போராட்டம், காலத்திற்குக் காலம் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய சக்திகளால் அர்த்தமற்ற தாக்கப்பட்டு உள்ளது. நீண்டகாலம் தவறான சக்திகளின் தலைமைக்கு உட்பட்டிருந்த தமிழ் சமூகம் தன்னுள்ளேயும் வெளியேயும் இருந்த சாதாரண முரண்பாடுகளையும் மிகவும் வன்மமான முரண்பாடுகளாக மாற்றி உள்ளது.

ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டு ஏனைய முரண்பாடுகளை நாமே பேசித் தீர்க்கலாம், அம் முரண்பாடுகள் தாமே அழிந்து போகும் என்றெல்லாம் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் 25 ஆண்டுகால போராட்டம் தொடங்கிய அதே புள்ளியில் நிற்க சாதியத்தின் வித்துக்கள் முன்னர் இருந்த அதே வீரியத்துடன் உறங்கு நிலையில் உள்ளது. இந்த வித்துக்கள் தமிழ் மக்களின் புலம்பெயர்வுடன் அவர்களது கலாச்சாரம் பண்பாடுகளுடாக உலகம் பூராவும் பரவியுள்ளது. காலமும் நேரமும் கனியும் போது அது தனது வீச்சைக் காட்டத் தவறுவதில்லை.

பெரும்பான்மைத் தமிழர்கள் தங்கள் மத்தியில் சாதியம் என்ற புற்றுநோய் இல்லையென்றே மறுக்கின்றனர். நோய்களை இனம்கண்டு அதற்கு சிகிச்சை பெறவதை மறுத்து, எம்மிடம் இவ்வாறான நோய்களே இல்லை என்று மறுப்பது எப்பிரச்சினைக்கும் தீர்வாகாது.

# தொடர வேண்டும் சாதீயத்திற்கு எதிரான போராட்டம்

எஸ் பாலச்சந்திரன்

இக்கட்டுரையை எழுதுவதற்கு முன் இது குறித்து யாழ்ப்பாண உயர்சாதி தமிழர் ஒருவரிடம் கருத்துக் கேட்டேன். உடனே அவர் "சாதி குறித்து எழுதாதே. மீறி எழுதினால் நீ ஒரு தமிழ்த் தேசியத் துரோகியாவாய்" என்றார். இதைக் கேட்டதும் ஒரு கணம் திடுக்கிட்டேன். நான் எழுதும் போதெல்லாம் பாராட்டி தொடர்ந்து எழுதும்படி உற்சாகம் ஊட்டியவர் சாதியைப் பற்றி எழுதப்போகிறேன் என்றதும் "எழுதாதே. எழுதினால் தமிழ்த் தேசியத் துரோகி" என்று சாபம் இடுகின்றார். உண்மைதான். சாதீயம் அந்தளவிற்கு ஆழ வேரூன்றி விருட்சமாக வளர்ந்துள்ளது. அதன் ஆணிவேரை அசைக்க முற்பட்டால் துரோகி என்ற பட்டம் மட்டுமல்ல துப்பாக்கித் தோட்டாவையும் யாழ்ப்பாண மேலாதிக்க வாதம் பரிசாக வழங்கும்.

1983ம் ஆண்டுக் கலவரத்தின் போது தென்னிலங்கைப் பகுதியில் இருந்த தமிழர்கள் சிங்களக் காடையினரால் தாக்கப்பட்டு காயம்பட்ட நிலையில், உடைமைகளைப் பறிகொடுத்த நிலையில் பரிதாபகரமான நிலையில் பஸ்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தனர். இவ்வாறு நெல்லியடி என்னும் பகுதியில் பாதிக்கப்பட்டவர்கள் வந்து இறங்கியபோது அதைப் பார்த்துக் கொண்டிருந்த 'கன்பொல்லை' கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சிலர் இதனை வெள்ளாளர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சண்டையாம் . என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் அன்றைய நிலை அதுதான். அவர்களையும் தமிழர்களாக உயர் சாதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் உயர் சாதியினரின் சாதீயக் கொடுமைகளில் இருந்து விடுதலை பெற தங்கள் கிராமத்திற்கு "கனப்பொல"என சிங்களப் பெயர் சூட்டி புத்த பிக்கு ஒருவரை வரவழைத்து புத்த ஆலயம் ஒன்றையும் உருவாக்கினார்கள். நல்ல வேளையாக சிங்கள இராணுவம் சாதி வேறுபாடின்றி, பிரதேச வேறுபாடின்றி தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் தாக்கியதால் அதற்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் திரட்டுவது இயக்கங்களுக்கு இலகுவாக அமைந்தது. இன்று அதன் மேல் தமிழ்த் தேசியம் கட்ட முனைகின்றனர். ஆனால் அதன் அடித்தளத்தில் உள்ள சாதீயப் பிரச்சனை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்படாமல் அவ்வாறே உள்ளது என்பதே உண்மையாகும்.

**தமிழ் ஈழம் கிடைத்தால் என்னவாகும் ?**

**என் சாதி மக்கள் அகதிகளாக அநுராதபுரம் செல்ல நேரிடும்.**

1989ம் ஆண்டுப் பகுதியில் இந்திய இராணுவத்திற்கெதிராக புலிகள் இயக்கம் போராடிக் கொண்டிருந்தபோது கரவெட்டிப் பகுதியில் அதன் ஒரு பிரிவுக்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பொறுப்பு வகித்தார். அவருடன் அவருடைய சாதியைச் சேர்ந்த இளைஞர்களே பெரும்பாலும் இருந்தனர். அவர் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இந்திய இராணுவத்திற்கு எதிராக போராடினாலும் கூட அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கும் அவருடைய சக போராளிகளுக்கும் உயர் சாதியினர் உணவு வழங்க மறுத்தனர். தங்குமிடம் கொடுக்க மறுத்தனர். குடிப்பதற்கு தண்ணீர் கூட

**"சாதீயம் நீறு பூத்த நெருப்பாக உள்ளது. அது என்றாவது ஒருநாள் மீண்டும் பற்றி எரியும்."**

கொடுக்க தயங்கினர். இதனால் அவர் பல தடைவ இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளானார். தனது போராளிகள் பலரை இழந்தார். அப்போது அவரிடம் ஒருவர் "தமிழ் ஈழம் கிடைத்தால் என்னவாகும்?" என்று கேட்டார். அதற்கு அப்பொறுப்பாளர் எவ்வித தயக்கமும் இன்றி "என் சாதி மக்கள் அகதிகளாக அநுராதபுரம் செல்ல நேரிடும்" என்று கூறினார். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. அந்தளவுக்கு சாதியக் கொடுமைகளை அவர் அனுபவித்திருந்தார். அன்று மட்டுமல்ல இன்றும் கூட இந்த நிலைமைதான் உள்ளது. மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்நிலை குறித்து லண்டனுக்கு வந்திருந்த வேளை மதிப்புக்குரிய தங்கவடிவேல் மாஸ்டர் அவர்களிடம் கேட்டபோது அவர் "சாதீயம் நீறு பூத்த நெருப்பாக உள்ளது. அது என்றாவது ஒருநாள் மீண்டும் பற்றி எரியும்" என்றார். இவருடைய இக்கூற்று மறுக்க முடியாத உண்மையாகும். எனவே உண்மையாகவே தமிழ் தேசியத்தை விரும்புவோர் முதலில் சாதீயத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து சாதீயத்தை ஒழிப்பதற்கு முன் வரவேண்டும். அவ்வழியிலேயே தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப முயலவேண்டும். மாறாக அடக்கியொடுக்கி பல வந்தமாக அவர்கள் கூறும் தமிழ் தேசியத்தைக் கட்டியெழுப்பினால் அது என்றாவது ஒருநாள் பீறிட்டு வெடித்துக் கிளம்பி, போலியாக கட்டியெழுப்பிய தமிழ் தேசியத்தையே சுக்கு நூறாக்கும். புலிகள் இயக்கத்தில் உப தளபதியாக இருந்த ராகவன் அவர்களும் "வடக்கில் நிகழும் இச்சாதிப்பிரச்சனை தீர்க்கப்படாவிடின் தமிழ் மக்கள் விடுதலை பெறமுடியாது" என்று கூறினார்.

இலங்கையில் குறிப்பாக வடக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் சாதி முறையும் தீண்டாமையும் பல வருடங்களாக இருந்து வருகின்றன.

சாதி அமைப்பு என்பது நிலப்பிரபுத்துவத்தின் ஒரு மிச்ச சொச்சமாகும். இலங்கையில் முதலாளித்துவம் ஒழுங்காக இல்லாமல் ஏற்ற இறக்கமாக வளர்ந்துள்ள படியால்தான் சாதி அமைப்பு இன்னமும் நின்று பிடிக்கிறது. ஆளும் வர்க்கத்தின் அரசு இயந்திரம் அது அழியாமல் இருப்பதற்கு துணைபுரிகிறது. எனவே சாதீயத்திற்கு எதிரான போராட்டம் பிற்போக்கு ஏகாதிபத்திய சார்பு சக்திகளுக்கு எதிரான தேசியப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். தங்களைத் தாங்களே முற்போக்கு சக்திகள் என்று கூறிக்கொள்ளும் சிலர் இதனைப் பார்க்கவோ புரிந்து கொள்ளவோ மறுக்கின்றனர். இப்போராட்டத்தை முன் எடுக்கத் தயங்குகின்றனர். இதுவே இன்றைய யதார்த்த நிலையாகும்.

இந்தியாவில் உயர்சாதியினரான பிராமணர் வெறும் மூன்று வீதமே சனத்தொகையில் உள்ளனர். ஆனால் தாழ்த்தப்பட்ட சாதியினர் சனத்தொகையில் பெரும்பான்மையினராக இருப்பதால் பாராளுமன்ற அரசியலில் சில சலுகைகளை பெறமுடிகிறது. ஆனால் இலங்கையில் வடக்குப் பகுதியில் உயர் சாதியினர் பெரும்பான்மையினராகவும் தாழ்த்தப்பட்ட சாதியினர் முப்பது சதவீதமாக சிறுபான்மையினராக இருப்பதனால் எந்தப் பாராளுமன்றக் கட்சியும் உயர் சாதியினரைப் பகைத்துக் கொள்ளவோ, புண்படுத்திக் கொள்ளவோ விரும்பவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினர் முப்பது சதவீதமாக இருந்தும் கூட அவர்கள் எந்தத் தேர்தல் தொகுதியிலும் பெரும்பான்மையைப் பெறமுடியாத விதத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல் கமிஸன் மற்றும் அதிகார வர்க்கம் அனைத்திலும் உயர் சாதியினர் இருப்பதால் அவர்களால் இவ்வாறு தந்திரமாக செய்ய முடிந்தது. ஆனால் தோழர்.சண்முகதாசன் தலைமையிலான கம்யுனிஸ்ட் கட்சி பாராளு மன்றப் பாதையை நிராகரித்து புரட்சிகர ஆயுதப்போராட்டத்தை முன்வைத்தது. அது தாழ்த்தப்பட்ட மக்களின் சாதீயத்திற்கு எதிரான போராட்டத்திற்கு துணிச்சலான தலைமையைக் கொடுக்க முன்வந்தது. இதன் பின் நிலைமை சற்றுமாறியது. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து நூற்றுக்கணக்கான போராளிகள் தோன்றினார்கள். புதிய உணர்வு கொண்ட இப்போராளிகள் அடிக்கு அடி கொடுத்தார்கள். இவர்களுடைய போராட்டம் ஆலயப் பிரவேசம், தேனீர் கடைப் பிரவேசம், பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளுதல் ஆகியவற்றைச் சுற்றி நடைபெற்றது. ஆனால் இன்னும் வேறு வடிவங்களில் இப்போராட்டம் நடைபெற்றது. சில போராட்டங்கள் வன்முறையான வடிவத்தில் நடைபெற்றன.

தாழ்த்தப்பட்ட மக்களின் சாதீய ஒடுக்கு முறைக்கு எதிரான இப்போராட்டத்தில் பொலிசார், நீதிமன்றங்கள், அதிகாரிகள் ஆகிய முழு அரசு இயந்திரமும் உயர் சாதியினருக்கு ஆதரவாக செயற்பட்டன. மாஜி மந்திரியாகிய சுந்தரலிங்கம் போன்றவர்கள் வெளிப்படையாக உயர் சாதியினருக்கு ஆலோசகர்களாக செயற்பட்டனர்.

இவ்வேளையில் சங்கானை என்னும் கிராமத்தில் உயர் சாதியைச் சேர்ந்த ஒருவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் இறுதி ஊர்வலத்தின் பாதையை மறித்து அவ் ஊர்வலத்தின் மீது சுட்டார். இத் துப்பாக்கிச் சூட்டிற்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பலியானார். கண்துடைப்பிற்காக சுட்டவரைக் கைது செய்த பொலிஸ் அவரை வெறும் 250 ருபா பிணையில் பிணையில் விடுவித்தது. நீதிமன்றம் அவரை நிரபராதி என்று கூறி விடுதலை செய்தது. போலிஸ், நீதிபதி எல்லாம் உயர் சாதியினருக்கு ஆதரவாக இருந்தமையினால் இவ்வாறு நடந்தது. எனவே இவ்அமைப்பில் தமக்கு நீதி கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த போராளிகள் அன்று மாலை சங்கானைச் சந்தையில் வைத்து அக்குற்றவாளியைச் சுட்டுக்கொன்றனர். அடிக்கு அடி கொடுத்தனர்.

இதே போன்று இந்தியாவில் தஞ்சாவூரில் கீழ்வெண்மணி என்னும் இடத்தில் கூலி உயர்வு கேட்ட தாழ்த்தப்பட்ட சாதிக் கூலித் தொழிலாளர்களை குடிசைக்குள் பூட்டி வைத்து எரித்துக் கொன்றனர் உயர் சாதியினர். இதற்கு காரணமான பண்ணையாரை 'அப்பாவி' என்று கூறி இந்திய நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் அவரை கம்யுனிஸ்ட் போராளிகள் சுட்டுக் கொன்றனர். இது தான் சாதிப் போராட்டத்தின் இயல்பு. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தம் கன்னத்தில் அறை விழுந்த போது மறு கன்னத்தைக் காட்டாமல் அடிக்கு அடி கொடுக்கக் கற்றுக்கொண்டார்கள். இந்த மாற்றத்திற்கு காரணம் கம்யுனிஸ்ட் கட்சிகள் இப்போராட்டத்திற்கு தலைமை அளித்ததாகும்.



இலங்கையில் கம்யுனிஸ்ட் கட்சியானது இப் போராட்டத்தை ஆதரிக்கக்கூடிய உயர்சாதி மக்களின் முற்போக்கான பகுதிகளை அணிதிரட்டியது. இக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் தலைமைத் தோழர்களில் சிலர் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள். இந்தப் போராட்டத்திற்கு அவர்கள் அளித்த தலைமையினால் இந்தப் போராட்டத்தின் நோக்கங்கள் சகல பகுதி மக்கள் மத்தியிலும் பரவலாயின. சிங்கள மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கையை அறிமுகம் செய்ய கட்சி பெரும் நடவடிக்கை எடுத்தது. பல தேசிய தின நாளிதழ்கள் இப் போராட்டத்தைப் பற்றிய பல செய்திகளை வெளியிட்டன. சீனாவின் பீக்கிங் வானொலி அதன் ஆதரவை இதற்குத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக பல வடிவக் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அற்புதமான பல கவிதைகள் பாடல்கள் தோன்றின. நூற்றுக்கு மேலான தடவை அரங்கேற்றப்பட்ட 'கந்தன் கருணை' என்னும் சிறப்பான நாடகமும் தயாரித்தளித்தார்கள்.

இந்து மதத்தின் படி கந்த பெருமானுக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது மனைவி வள்ளி 'குறவர்' என்னும் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர். இதனால் நாரதர் கந்த பெருமானிடம் சென்று இலங்கையில் வடக்குப் பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் உயர் சாதியினரால் இம்சிக்கப்படுவதாக முறையிடுவதுடன் இவ் நாடகம் ஆரம்பிக்கின்றது. இதைக் கேட்ட கந்த பெருமான் கோபம் கொண்டு இதற்கு தண்டனை வழங்க பூமிக்கு வருகிறார். அவரின் பெயர் கந்தன் என்பதால் அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என்று சந்தேகம் கொண்ட உயர் சாதியினர் அவரை முருகன் ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட கந்த பெருமான் உயர் சாதியினர் மீது எறிவதற்காக தனது ஆயுதமாகிய 'வேல்' ஐ உயர்த்தினார். அப்போது நாரதர் இடைமறித்து "இந்த ஆயுதத்தை மக்களிடம் கொடுங்கள். அவர்கள் பாவிக்கட்டும்" என்று கூறுகின்றார். இந்த மாவோயிச அரசியல் தத்துவத்துடன் அந்நாடகம் முடிவடைகின்றது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் ஒற்றைப்பரிமாணம்?

~ பேராசிரியர் ரட்ண ஜீவன்கூல் ~

இலங்கைத் தமிழர்களாகிய நாம் ஒற்றைப் பரிமாணம் கொண்டவர்களாக என்றும் இருந்ததும் இல்லை. இருப்போம் என்பதும் சந்தேகமே. இது மனித சமூகத்தின் இயல்பு நிலை சம்பந்தப்பட்டது.

சிங்கள மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்களே இலங்கையை ஆள்கிறார்கள். முக்கியமான முடிவுகளின் வெளிப்பாடுகளை அவர்களே தீர்மானிக்கிறார்கள். இவை எமது உறவு சம்பந்தப்பட்டவை என்பதை அவர்களும், தமிழர்களாகிய நாமும் அறிவோம். இவர்கள் ஏன் போராடுகிறார்கள்? என பல சிங்களக் கல்விமான்கள் அடிக்கடி ஆச்சரியத்துடன் கேட்பார்கள். புலிகளின் தோற்றத்தின் பின்னரே தமிழர்களுக்கு பிரச்சனைகள் இருப்பதாக பல சிங்கள கல்விமான்கள் என்னிடம் கூறியுள்ளனர்.

அவர்களைப் பொறுத்தவரையில் தமது ஆட்சி யாளர்கள் எந்தவிதமான பிரச்சனையும் இல்லாமல் கடந்த காலங்களில் தமிழர்களை நன்கு நடத்தி இருப்பதாகவே கருதுகின்றனர். தென்னாபிரிக்க வெள்ளையர்கள் பலரும் தமது ஆட்சியாளர்கள் கறுப்பர்களை நன்கு நடத்தியதாகவே நம்பினார்கள். தமது குடியேற்ற ஆட்சிக்குட்பட்ட மக்களுக்கு தாம் சிறந்த நாகரிகத்தைப் போதித்ததாக பிரித்தானியர்கள் நம்பினார்கள்.

இதேபோன்று தமது நுகத்தடியில் வாழுகின்ற தமிழ் மக்கள் சுமைகளோடு வாழ்வதாக தமிழ் ஆட்சியாளர்கள் எப்போதாவது உணர்ந்தார்களா? அதற்கான சாத்தியமுண்டா?

தமிழ்ச் சமூகம் மாபியா போன்ற வெள்ளாள சமூகத்தினரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை மிகவும் ஆணித்தரமாக முன் வைக்க விரும்புகிறேன். புலிகளின் தலைமை அச்சமூகத்தைச் சார்ந்ததாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதன் அறிவுத்தளம் வெள்ளாள சமூகத்திடம் தான் உள்ளது. றோமன் கத்தோலிக்கரும், கரையோர மக்களும் கீழ்ச் சாதியினர் என நியூயோர்க் இலங்கைத் தமிழ்ச் சங்கம் தனது வெளியீட்டில் தெரிவித்திருந்தது.

தற்போது வல்வெட்டித்துறையில் வாழும் மக்களை உயர்ந்த அரச வம்ச சாதியாகக் காட்டும் கட்டுரைகள் வெளியாகி வருகின்றன. தலைமைத்துவத்தை அங்கீகரிக்கு முன் சாதியை உயர்ந்த அந்தஸ்திற்கு எடுத்துச் செல்வது அவசியத் தேவையாகியுள்ளது. நாவலரை உயர்ந்த இந்துவாக உயர்தியதன் பின்னரே அவர் மொழிபெயர்த்த பைபிளின் சிறப்பு விபரிக்கப்பட்டது. உயர்ந்த சாதியினரால்தான் உயர்ந்த கருத்துக்கள் முன்வைக்கப்படலாம் என்பதை நிருபித்த பின்னரே பாலசிங்கம் மாமனிதராக்கப்பட்டார். இது வெள்ளாள சமூகத்தினரால் ஈழப் பிரச்சாரத்தில் முன்வைக்கப்படும் தத்துவார்த்த விளக்கங்களாகும். போராட்டத்தில் இறப்பவர் களுக்கு ஓர் சமூக அந்தஸ்தினை வழங்க எடுக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடாகும்.

புலிகளில் வெள்ளாளர் அல்லாதோர் உள்ளனர். அவர்கள் அதிகாரத்தின் உச்சநிலையில் உள்ளார்கள் என்பதும் உண்மையே. முதலில் உயர் சாதியர் யார்? என்பதனை விளக்கினால் மட்டுமே அதிகாரத்தில் இருப்பவரை அங்கீகரிப்பது நியாயப்படுத்தப்பட முடியும். அதுவரை இவை தொடரும். இன்னும் இரண்டு தலைமுறை சென்றால் அவர்களும் வெள்ளாளர் அல்லது சைத்திரியர் ஆகிவிடுவர்.

கடந்த 2007 ஆகஸ்ட் 6ம் திகதி புலிகளின் Tamilnet என்ற இணையத் தளத்தில் பறையர் சமூகத்தினர் என்போர் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பில் மிகவும் சிறப்பு மிக்க வழித் தோன்றல்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இணையத்தளத்தின் ஆசிரியர்களை பறையர்கள் என அழைத்தால் மகிழ்ச்சி அடைவார்களா என்பது சந்தேகமே. இதுவே வெள்ளாள சமூகத்தின் போலித்தனமாகும். ஒரு புறத்தில் சாதி என்பது கற்பனை எனக் கூறிக் கொண்டு மறு புறத்தில் அவர்களைக் கீழே அமுக்கி வைக்க முடியாததால் போலியான விதத்தில் வெள்ளாளர்களாக உயர்த்தி வைப்பதன் மூலம் சாதியத்தைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர். அமுக்கி வைக்க முடியாவிடில் தெரிவு செய்து தமது மட்டத்தில் தற்காலிகமாக வைத்திருத்தலாகும்.

வெள்ளாள சாதியினரின் அதிகார முன்னிலைப்படுத்தலும், மேற்குலக நாடுகளில் புதிதாகத் தோன்றியுள்ள பணக்கார வர்க்கமும் இணைந்து புதிய தொழிலில் செயற்படுகின்றன. இவர்கள் அவர்களது குடும்ப வரலாறுகளுக்கு புதிய விளக்கம் அளிக்கின்றனர். பழைய அரசர்களின் காலத்திற்குச் சென்று ஆதாரங்களைத் திரட்டி விளக்கம் அளிக்கின்றனர். பண்பாடான கலாச்சாரத்தினை அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் கொண்டிராத பலர் சிறந்த பண்பாட்டு குடும்ப மரத்தின் வாரிசுகளாக விபரிக்கப்படும் வரலாறுகள் தற்போது எழுதப்படுகின்றன. றோமன் கத்தோலிக்கர் என்போர் கீழ் சாதியர் என வர்ணித்த தமிழ்ச் சங்கம் வெளிநாட்டில் வாழும் இன்னொரு றோமன் கத்தோலிக்க குடும்பத்தினரை ஆரிய சக்கரவர்த்தியின் வழித்தோன்றலாக வர்ணித்து எழுதியுள்ளது. தமிழ்ச் சமூகத்தின் தலைவிதி இவ்வாறான மடைத்தனமான சமூகப் பிரக்ஞையே இல்லாத வெளிநாட்டுத் தமிழர்களின் கையில் சிக்கிச் சீரழிவது நம்பகரமானதாக அமையுமா?

ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் புலிகளின் ஆலோசனையாளர்கள் என அழைக்கப்படுவோர் பலரும் வெள்ளாளர்களே. இந்த உண்மையை இவர்களால் மறைக்க முடியாது. சட்ட ஆலோசகர்களாக பேச்சு வார்த்தைக்குச் சென்றவர்கள் வெள்ளாளர் அல்லாதோர் என்ன செய்யவேண்டுமெனக் கூறுவார்கள். இவர்கள் ஒரு காலத்தில் எதிரிகளுடன் இணைந்து செயற்பட்டவர்கள். இவர்கள் வெள்ளாள குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை விட தாம் அவ்வாறான குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறியே வாழ்ந்த பின்னணியைக் கொண்டவர்கள்.

இன்னொரு அம்சத்தைப் பார்ப்போம். தமிழ் தலைமையைப் பார்ப்போம். யாழ்ப்பாணத் தலைமையினால் சகல தமிழரையும் முன்னெடுத்துச் செல்ல முடியுமா? எமது கடந்த கால தமிழ்த் தலைமைகள் ஏன் மக்களால் தோற்கடிக்கப்படார்கள் எனபதை இன்னமும் புரிந்து கொள்ள முடியாமல் சிங்களத் தலைமை அவதிப்படுவது போல் இன்றைய தமிழ்த் தலைமைகளால் தொடர்ந்து செல்ல முடியுமா? கிழக்கு மாகாண மக்களின் கணிசமான ஆதரவு இல்லாமல் கருணாவால் இவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியுமா? என கிழக்குப் பல்கலைக்கழக கல்விமான்களால் உறுதிபடக் கூற முடியவில்லை. மண்ணுக்குள் தலையைப் புதைத்து வைத்துக் கொண்டு நீண்ட காலம் இந்த உண்மையை மறைக்க முடியாது.

சிங்கள ஒடுக்குமுறையில் இருந்தும், விஸ்தரிப்பில் இருந்தும் வெவ்வேறு குழுக்களாக உள்ள மக்கள் வெவ்வேறு விதங்களில் போராடி வருகின்றனர். கிழக்கு மாகாண மக்கள் யாழ். மேலாதிக்கத்தில் இருந்தும் தம்மை விடுவிக்க முயற்சிக்கின்றனர். கீழ்சாதி மக்கள் வெள்ளாள அதிக்கத்திலிருந்து விடுதலை பெற போராடுகின்றனர். சிங்கள, தமிழ் மேலாதிக்கத்திற்கு இடையில் நசுங்கியுள்ள முஸ்லீம் மக்கள் தம்மை விடுவிக்கப் போராடுகின்றனர். தமிழ் புரட்டஸ்தாந்து சமூகத்தினர் இன்றுள்ள புதிய ஒழுங்கிலிருந்தும் தம்மை விடுவிக்க அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர். மேற்கு நாடுகளில் தம்முடைய ஸ்தானத்தைப் பலப்படுத்துவதும் ஒரு போராட்டம்தான்.

முஸ்லீம் மக்கள் சம்பந்தப்பட்ட எமது பிரச்சாரத்தைப் பார்ப்போம். 27 சதவீதமான தமிழர்கள் வாழ்வதாக சேர். பொன். இராமநாதன் முஸ்லீம் மக்களையும் தமிழ் பேசும் மக்கள் எனக் கூறி இணைத்தார். சேர். ராசிக் பரீத், மற்றும் முஸ்லீம் தலைவர்கள் தம்மைத் தமிழர்கள் என அழைப்பதை விரும்பவில்லை. தமிழரசுக் கட்சி ஒரு வகையில் பாலமாகச் செயற்பட்டு அவர்களது வாக்குகளையும் பெற்றது. எம்மோடு வாழத் தகுதி அற்றவர்கள் என்பதால் அவர்கள் துரத்தப்பட்டதால் இவை யாவும் தற்போது பூச்சியத்திற்கு வந்துள்ளன. இந்நிலையில் நாம் மொத்த தமிழ் மக்களுக்காகவும் பேசத் தகுதி உள்ளவர்களா?

70களில் மலையக மக்களை வன்னியில் வந்து குடியேறுமாறு உற்சாகப்படுத்தப் பட்டது. இதனால் இவர்கள் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே பாதுகாப்பு கேடயமாக இருப்பார்கள் எனக் கருதினார்கள். மலையத்தில் இருந்த பிச்சைக்காரர்கள் யாழ்ப்பாண நகரத்திற்கு வந்தபோது எமது சகோதர வாஞ்சை வேறு விதமாக இருந்தது.

தமிழ்பேசும் மக்களின் போராட்டம் என்பது மிகவும் விசாலமானது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிராக போராடுவது என்பது சகல சிறுபான்மையினரினதும் ஆதங்கங்களின் கூட்டாக இருத்தல் வேண்டும்.

(தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலமாகிய தலைவர் அ அமிர்தலிங்கம் அவர்களின் 80வது பிறந்த தினத்தையொட்டி ஒகஸ்ட் 26, 2007ல் லண்டன் வைஎம்சிஏ யில் இடம்பெற்ற நினைவு நிகழ்வில் கலாநிதி ரட்ணஜீவன் கூல் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)

## 4ம் பக் தொடர்ச்சி.....

## மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம்

அமைப்பினர் கோவிலுக்குச் செல்வதும் அவர்கள் தடுப்பதும் வழமையாகிவிட்டது.

இக்கால கட்டத்தில் முக்கியமான விடயம் இச்சாதி அமைப்புக்கு எதிராக பிரச்சாரரீதியில் கந்தன் கருணை எனும் சிந்துநடை மெட்டில் அமைந்த நாடகம் சகல இடங்களிலும் வெற்றிகரமாக ஓடி அமோக வரவேற்பைப் பெற்றது. இதனை நெல்லியடி அம்பலத்தடிகள் மன்றம் நடத்திவந்தது. மாவிட்டபுரத்திலும் நடத்தப்பட்ட போது இடையில் குழப்பம் ஏற்பட்டது.

ஒருநாள் மாவிட்டபுரத்தில் வெகுஜன இயக்கத் தோழர்கள் திட்டமிட்டபடி கோவில் கிழக்கு முகப்பில் போலிசாருடன் சுந்தரலிங்கம் கதைத்துக் கொண்டிருந்த தருணம் சிலர் மெதுவாகச் சென்று வெளிக்கிணற்றின் முள்வேலியைப் பிரித்து துலாக் கயிற்றைப் பிடித்து தண்ணீர் அள்ளிவிட்டனர். இதனை அவதானித்த சுந்தரலிங்கம் சத்தம் போட்டபடி ஓடிவந்தார். தோழர்கள் அவரை உள்ளே போகவிட்டு உள் ஒரு வட்டம், அதையடுத்து வெளியே ஒரு வட்டமாக மூடிவிட்டனர். ஓங்கி அடித்தால் காவலுக்கு நின்றவர்களுக்கு தெரிந்துவிடும் என்றபடியால் அவரைக் காலால் தட்டி வீழ்த்திவிட்டு உளக்கத் தொடங்கினர். அவரின் கூக்குரல் வெளியே கேளாத வண்ணம் தோழர்களின் அரோஹரா கோஷம் மேவிநின்றது. என்றாலும் இக்குழப்பத்தைக் கண்டுவிட்ட காவலர்கள் ஓடிவந்தனர். தாறுமாறாக அடிகள் விழத் தொடங்கியவுடன் கூட்டம் சிதறியது. பின்பு சுந்தரலிங்கத்தை தூக்கி வந்தவர் வேட்டிசட்டை கிழிந்து உட்காற்சட்டையுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அன்று கோவில் வீதிகளில் அமைப்பைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்.

அடுத்த நாளும் கோவிலுக்குச் சென்ற போது பக்தர்களை விட படையே கூடுதலாக இருந்தது. அவர்கள் தரப்பில் இருந்து அரசாங்கச் செய்தி ஒன்று வந்திருந்தது. அதாவது கோவில் பிரவேசத்தைத் தடுக்கவும் கூடாது, பலவந்தமாக உட்செல்லவும் கூடாது என்று கோவில் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. இயக்க உறுப்பினர்கள் ஆசார சீலர்களாக உட்சென்று இறைவனை வணங்கினர். அந்த நிலையிலும் காவல் படையின் பார்வை கடுமையாகத் தான் இருந்தது. அன்று அப்போராட்டத்திற்கு தலைமை தாங்கிய அமைப்புக்கு முழு வெற்றி.

பாராளுமன்றத்தில் அப்போது பிரதிநிதிக ளாக இருந்த பிரேமலால் குமாரசிறி, எஸ். டி பண்டாரநாயக்க, சண்முகதாசன் போன்றோரின் அயரா உழைப்பே இந்த வெற்றிக்குக் காரணம்.

## 3ம் பக் தொடர்ச்சி.....

## ஜாதியைக் காப்பாற்றும்

கூட்டணியினர் தப்பிக்கொள்ள முயன்ற கதையும் தெரியும். சுருக்கம் காரணமாக இதுபற்றி இங்கு விபரிக்கவில்லை ஆனால் நிச்சயமாக பின்பு பார்ப்போம். அதுமட்டுமின்றி இன்றைக்கு அங்கு தொடரும் மேலாதிக்க ஒடுக்குமுறைகளை கொஞ்சம் கொஞ்சமாக லண்டன் குரலில் வெளிக்கொண்டு வருவோம் என்பதையும் இங்கு கூறிக்கொள்கிறோம்.

போதாக்குறைக்கு காரைநகர் இந்துக் கல்லூரியில் வேலை செய்யும் பல ஆசிரியர்கள் நலன்புரி சங்கத்தாரின் உறவினர்களாகவோ, நண்பர்களாகவோ இருக்கிறார்கள். இந்த இந்துக் கல்லூரி இன்று மேலாதிக்க எம் பி தியாகராசாவின் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த தியாகராசாவின் மருமகன்தான் காரை நலன்புரிசங்கத்தின் செயலாளராக கடந்த 25 வருடங்களாக இருக்கிறார். இவரது தகப்பனார் சபாபதிபிள்ளை எதுவித அரசியல்அடிப்டையுமற்று கட்சிக்கு கட்சி தாவி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இயங்கியது பலரும் அறிந்ததே. கிட்டத்தட்ட சங்கம் தொடங்கிய காலம் தொட்டு இன்றுவரை சங்கத்தை தங்கள் சொந்த குடும்பச் சங்கமாக நடத்தி வரும் களபூமிக்காரரின் சாதித் தடிப்பு இன்று அச்சங்கத்தை ஏறத்தாள சாதிச்சங்கமாக மாற்றிவிட்டிருக்கு. பிறகேன் 'காரைநகர்' பேரை இழுப்பான் என்று தெரியவில்லை. சும்மா வெள்ளாளர் நலன்புரிசங்கம், அல்லது களபூமியர் நலன்புரி சங்கம் என்று வைத்துக் கொண்டிருந்திருக்கலாம்.

சமீப காலங்களில் அகதியாக ஓடி வந்தவர்கள் போலன்றி இவர்கள் லண்டனில் நன்றாக கால் ஊன்றியவர்கள். அவர்களிடம் தாராளமாக இருக்கும் நேரமும் வசதியும் காரணமாக 'சமூகசேவை', 'சங்கம்' என்று ஓடித்திரிய அவர்களாள் முடிகிறது. தங்களின் சுய திருப்திக்காக சங்கங்கள் கட்டும் பல்வேறு வசதியானவர்களில், கார்நகர் நலன்புரிசங்கத்தின் சாதிய தடிப்பு ஓங்கியிருப்பதால், அதில் ஒரு நல்ல சூடுபோட வேண்டியது எமது கடைமையாக இருக்கிறது.

இந்த வருடம் அண்மையில் நடந்த இச்சங்கத்தின் ஒரு கமிட்டி கூட்டத்தில் அச்சங்கத்தின் உபதலைவர் கோனேசலிங்கம் ஒடுக்கப்பட்ட காரைநகர்வாசி ஒருவர்மேல் காழ்ப்பு காட்டி, இவர்களையெல்லாம் இச்சங்கத்துக்குள் கொண்டுவர வேண்டாம் என்று மிரட்டியது பலரதும் கோபத்தை கிளறிவிட்டுள்ளது. இதை கண்டும் கானாமல் இருந்தவர்கள், இது தொடர்பாக அதிருப்தியடைந்தவர்கள், பிரிந்து சென்று இன்னுமொரு சங்கம் கட்டியுள்ளவர்களின் கருத்துக்கள் முதலான மேலதிக செய்திகளை அடுத்த லண்டன் குரலில் படிக்கவும்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்ற்ஹாம் மஹாலட்சுமி ஆலய விவகாரம்

## டொக்டர் அழகராஜாவுக்கு எஸ் முருகையா பதிலளிக்கிறார்

எஸ் முருகையா



லண்டன் குரல் ஆசிரியருக்கு, குரல் 18ல் 5ம் பக்கம் வெளியான Dr. அழகராஜா என்பவரின் கடிதம் ஓர் தமிழன் என்ற வகையில் என்னைப் புண்படுத்தி உள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டபடி Dr. அழகராஜா தன்னை ஒட்டுமொத்த தென்னிந்தியர்களின் ஏகப்பிரதிநிதியாக வரித்துக் கொண்டதுடன் அவருடன் வாக்கு வாதப்படும் அவர் குறிப்பிட்ட Dr. சங்கரலிங்கம், ஜெகநாதன் மற்றும் சுந்தரேசன் என பெயர் குறிப்பிட்டவர்களை ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக வரித்துக் கொண்டதும் அவர் தனது கடவுள் வியாபாரப் போட்டியில் இருக்கும் எதிராளிகளின் பெயர்களைப் பயன்படுத்த வேண்டி தன் கடிதத்தில் இலங்கைத் தமிழர்கள் எனக்குறிப்பிட்டது அவர் ஒட்டு மொத்த தமிழர்களை இழிவுபடுத்தும் செயலும் அவரின் மாபெரும் தப்புமாகும்.

இதற்கு அவர் தன் கடிதத்தில் இலங்கைத் தமிழர்கள் என்று பயன்படுத்தியதை வாபஸ் பெறுவதுடன் அறியாமை காரணமாகவோ அல்லது ஆத்திரம் காரணமாகவோ தன் பொறுப்பின் பண்பை மறந்து இவ்வாறு இலங்கைத் தமிழர்களை புண்படுத்தும் வகையில் கடிதத்தை மக்கள் குரலாக இருக்கும் லண்டன் குரல் பத்திரிகையில் பிரசுரிக்க அனுப்பியமைக்காகவும் தன் தனிப்பட்ட எதிராளிகளின் பெயருக்குப் பதிலாக இலங்கைத் தமிழர்கள் என்று பயன்படுத்தியதற்கு லண்டன் குரல் பத்திரிகை வாயிலாகவோ அன்றி பொதுவான ஓர் ஊடகம் வாயிலாகவோ மன்னிப்புக் கோர வேண்டும்.

அவ்வாறு அவர் செய்யாத பட்சத்தில் தன் தனிப்பட்ட பிரச்சனைக்காக இலங்கைத் தமிழர்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை தவறாக பயன்படுத்தியமைக்கான சட்ட நடவடிக்கையை சந்திக்க நேரிடும் என்பதை தெளிவாக கூறிவைப்பதுடன் மேலும் trust, trustee என்ற பதங்களுக்கான முழு அர்த்தத்தை புரிந்து கொள்ளும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எழுந்தமானமாக கடவுளையோ அல்லது தமிழர்களின் பிறந்த மண், பிறந்த நாடு போன்ற இறையாண்மை கொண்ட விடயங்களை தனது சொந்தப் பிரச்சனைகளை முன்னெடுப்பதற்காக பயன்படுத்துவதற்கு அவருக்கு மட்டுமல்ல, யாருக்கும் உரிமை இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமின்றி மதத்தையும் மொழியையும் தாங்கள் புத்திசாலிகள் என்ற நினைப்பில் தனிப்பட்ட தம் இலாபங்களுக்காக எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று நினைப்பார்களேயானால் அதற்குரிய தண்டனையையும் அவர்கள் அனுபவித்தே ஆக வேண்டும்.

"தென்னிந்தியர்கள் முட்டாள்கள் அல்ல கோயிலை இலங்கைத் தமிழர்களிடம் ஒப்படைப்பதற்கு" என்று Dr. அழகராஜா குறிப்பிட்டபடி தென்னிந்தியர்கள் முட்டாள் களா? இல்லையா? என்பதை ஒவ்வொரு தென்னிந்தியரும் முடிவெடுக்க வேண்டுமே தவிர அதை Dr அழகராஜா என்ற ஓர் தனி மனிதன் தீர்மானிக்க முடியாது. அவர் குறிப்பிட்டபடி மகாலக்ஷ்மி கோயில் ஒன்றும் வியாபார நிறுவனமல்ல கையளிப்பதற்கு. அல்லது இது Dr அழகராஜாவின் தனிப்பட்ட சொத்தல்ல, இது பொதுச்சொத்து. இறுதியாக ஐக்கிய இராச்சியம் வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

Dr. அழகராஜா, Dr. சங்கரலிங்கம் ஆகிய இரு தனிப்பட்ட நபர்களின் சுயலாப எழுந்தமான போக்கால் சர்வதேச நாடொன்றில் தமிழும் தமிழர்களும் இந்துமதமும் நீதிமன்றங்களில் படியேறுவதை அனுமதிக்காமல் சமூகத்தில் இவ்வாறு குழப்பம் தரும் பெரியவர்கள் என்ற போர்வையில் தனிப்பட்ட இலாபம் தேடும் ஆசாமிகளை அப்புறப்படுத்தி இளைய தமிழ் சமுதாயத்தினர் இந்நாட்டில் சுமுகமாக வாழ வழிசெய்ய அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

கோயில்களை குறித்த சமூக அல்லது பிரிவு வரையறைக்குள் உருவாக்கும் சூழலை தடுத்து மக்கள் நிம்மதியாக ஆண்டவனை தரிசிக்கும் நிறுவனமாக கோவில் இருக்கு மானால் அவை ஓர் பொது அமைப்பாக யாரும் தனிப்பட்ட முறையில் அல்லது பிரிவுரீதியில் உரிமைகோர முடியாது செய்ய வேண்டும். அவ்வாறு தனிப்பட்ட முறையில் உரிமை கோரும் கோவில்கள், தனிப்பட்ட வியாபார நிறுவனமாக கருதப்பட்டு இங்கிலாந்து வியாபார நிறுவனச் சட்டத்தின் கீழ் மக்கள் பொதுச் சொத்து அடிப்படையில் இருந்து பிரிக்கப்பட்டு, அரசுக்கு வரிசெலுத்தி இயங்கும் நிறுவனமாக மாற்ற அவ்வப்பகுதி சார்ந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டம் எழுதப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் இங்கு பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழும் எம் ஆசிய சமூகமும் எதிர்கால எம் சந்ததியும் பல சீர்கேடுகளையும் அழிவுகளையும் ஒரு சில தனிப்பட்ட மனிதர்களின் 'வங்கி மீதி' உயர விலையாக கொடுக்கும் துர்ப்பாக்கியசாலிகளாவது தவிர்க்க முடியாததாகும்.

எஸ் முருகையா (BA Hons)
முன்னாள் விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

# சில்லறை வியாபாரிகளுக்கு உலை வைக்கும் வியாபார முதலைகள்

அணுசக்தி, ஈரான் உட்பட பல்வேறு பிரச்சனைகளுக்கு அமெரிக்காவின் தொங்கு சதையாக (extra fitting) செயல்பட்டுவரும் மன்மோகன்சிங்கின் காங்கிரஸ் அரசில் தற்போது அமெரிக்காவுக்கு காவடி தூக்க ஆரம்பித்து இருப்பவர்கள் வரிசையில் நிதி அமைச்சர் பா சிதம்பரம் முன்னணியில் இருக்கிறார். இவர் அமெரிக்காவில் இருந்து வெளியிட்ட அறிக்கையில் சில்லறை வணிகத்தில் ஈடுபட வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று கூறியுள்ளார்.

தற்போது இந்தியாவில் பகாசூர நிறுவனங்களின் படையெடுப்புகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சிறு வணிகமும் மற்றும் நடுத்தர அளவிலான வணிகமும் இன்று முழுமையாக துடைத்தெறியப்படும் அபாயம் சிதம்பரத்தின் அறிக்கை மூலம் வெளியிடப்பட்டு உள்ளது. கடந்த 2 ஆண்டுகளாகவே பெருவாரியான பெரிய தொழில் நிறுவனங்கள் இராட்சதத் திட்டங்கள் வகுத்து சில்லறை வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவின் மிகப்பெரிய சில்லறை சந்தைகளின் மீது பார்வையை பதித்துள்ள வோல்மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தற்போது 300 பில்லியன் டொலர்கள் (14 லட்சம் கோடி) அளவுக்கு உள்ள தனது முதலீட்டை 2015ம் ஆண்டுக்கு முதல் 637 பில்லியன் டொலர் அளவுக்கு வளரும் என்று எதிர்பார்க்கின்றது.

இந்தியாவின் சில்லறை சந்தையில் 3 விழுக்காடு தொழிலாளர்கள் மட்டுமே முறைப்படுத்தப்பட்ட வகையைச் சேர்ந்தவர்களாக தற்போது இருக்கிறார்கள். இந்த சந்தை ஏற்கனவே ஆண்டுக்கு 30 விழுக்காடாக வளர்ந்து கொண்டிருக்கிறது. வளர்ந்து கொண்டிருக்கும் இந்த சில்லறை சந்தையை கைப்பற்றத்தான் பன்னாட்டு நிறுவனங்கள் திட்டம் வகுத்துள்ளனர்.

ரிலையன்ஸ் நிறுவனம் காய்கறிகள், பழங்கள் விற்பதற்காக Fresh மற்றும் Select என்ற பதிவுப் பெயர்களில் தனது முதல் சில்லறை அங்காடியை கடந்த நவம்பரில் ஹைதராபாத்தில் தொடங்கியது. இந்நிறுவனம் 25,000 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் நாடு முழுவதும் 68 பதப்படுத்தப்படும் மையங்கள் அமைப்பது மற்றும் நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்வது ஆகியவை அடங்கும். இதற்காக விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்வது என்பதும் அடங்கும். இதன் விளைவாக அவர்கள் லட்சக் கணக்கான சில்லறை வணிகர்களை மட்டுமன்றி அதிக அளவிலான மொத்த வியாபாரிகளையும் வணிகர்களையும் இடைத்தரகர்களையும் மற்றும் விவசாயப் பொருட்களுக்கு சந்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற எண்ணற்ற விற்பனை நிறுவனங்களையும் தூக்கியெறிந்து விடுவார்கள்.


ரிலையன்ஸ் மட்டும் இந்த துறையில் நுழையவில்லை. ஐ.டி.சி யின் சொவ்பால் ∴பிரஸ் என்ற நிறுவனம் 1250 கோடி முதலீட்டுத் திட்டத்தை மேற்கு மாநிலத்தில் தொடங்கியுள்ளது. மேலும் பான்தலூன் நிறுவனமும் அனில் அம்பானி, டாட்டா, ஆதித்யா பிர்லா குழுமத்தின் நிறுவனம் (திட்டமிட்ட முதலீட்டுத் தொகை 6000 கோடி) பாரத் குழுமத்தின் (மிட்டல்) நிறுவனம் முதலியன சில்லறை வணிக சந்தையில் குதிக்கின்றன. தற்போது சிதம்பரத்தின் அழைப்பின் மூலம் சர்வதேச சில்லறை நிறுவனங்களும் நாட்டிற்குள் நுழைய தீவிரம் காட்டுகின்றன. அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட சில்லறை சந்தையை தற்போதைய அளவிலான 7 பில்லியன் டொலரில் இருந்து அடுத்த 5 ஆண்டுக்குள் 80 பில்லியன் டொலர்கள் அளவுக்கு அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. புதிய முதலீட்டிலும் (நில விற்பனை தொழில் தவிர்த்து) 20 பில்லியன் டொலர்கள் அளவுக்கு முதலீட்டை அதிகரிக்க திட்டமிட்டுள்ளன.

உலகத்தின் மிகப்பெரிய நிறுவனமான வோல்மார்ட் நிறுவனம் சில்லறைத் துறையில் மிகப்பெரிய அளவில் நுழைவதற்காக பாரத் குழுமத்தின் கூட்டு தொழில்திட்டம் தொடங்க உடன்படிக்கை செய்துள்ளது. இந்நிறுவனத்தின் தலைவர் இந்திய அமைச்சர்களையும் பிரதமரையும் சந்தித்துவிட்டு சென்றுள்ளார்.

உலகத்தின் 4 மாபெரும் தேசங் கடந்த பழ நிறுவனங்களான (INC Fruit Companies) Chiquita, Dole Food, Fresh Del Monte மற்றும் Cabestan ஆகியவை சிறிய பகுதி வாரியான கடைகளை (குறிப்பாக தென்னிந்தியாவில்) சங்கிலி தொடர்வரிசையில் அமைக்க திட்டமிட்டு வருகின்றனர்.

இந்தியாவில் நாடு முழுவதும் 1.2 கோடி சில்லறை கடைகள் இருக்கின்றன. இவற்றில் 80 விழுக்காட்டிற்கும் அதிக மான கடைகள் குடும்ப உழைப்பை பயன்படுத்துகின்ற சிறிய தொழில் குடும்பங்களால் தான் நடத்தப்படுகின்றன. பெரிய சங்கிலி தொடர் சில்லறை நிறுவனங்கள் நடுத்தர மற்றும் உயர் வர்க்கத்தின் சில்லறை நுகர்வை குறிக்கோளை கொண்டிருப்பதன் மூலம் 230 பில்லியன் டொலர்கள் (ஏறத்தாள 9 லட்சம் கோடி ரூபாய்) அளவுக்கு வாங்கும் திறன் படைத்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ள 3 கோடி மக்கள் தொகையை இலக்காக்குகின்றது.

சீனாவிலும் பிரேசிலிலும் இந்த பெரிய சங்கிலித் தொடர் சில்லறை நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை சந்தையை ஏற்கனவே 5 விழுக்காட்டில் இருந்து முறையே 20 விழுக்காடு மற்றும் 38 விழுக்காடு வரை கடந்த 10 ஆண்டுகளில் உயர்ந்திருக்கின்றன. இதிலிருந்து இந்த சங்கிலித் தொடர் நிறுவனங்கள் உள்ளே புகுந்தால் எந்த அளவுக்கு சிறிய மற்றும் நடுத்தர கடைக்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க முடியும்.




அவசர நிலைக் காலத்தில் ஏறத்தாள 7 லட்சம் தலித் மக்கள் காங்கிரஸ் ரவுடிக் கும்பல்களால் டெல்லியின் நகரத்திற்கு வெளியே தூக்கி வீசப்பட்டனர். நகரங்களை அழகுபடுத்துவதன் பேரிலும் மாசுக் கட்டுப்பாட்டின் பேரிலும் தொழிலாளர்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் நகர்புறங்களில் இருந்து தூக்கி எறிந்த நீதிமன்றங்கள் தற்போது சிறுவணிகர்களையும் குறிவைத்து நகர்புறங்களில் இருந்து அப்புறப்படுத்த ஆணைகளை பிறப்பித்து வருகின்றது. இதனால் டெல்லியில் மிகப் பெரிய கடையடைப்பும் போராட்டங்களும் வெடித்துள்ளன. டெல்லியில் மட்டும் 50 லட்சம் சிறு தொழில் நடத்தும் குடும்பங்கள் பாதிக்கப்படும் என கணக்கிடப்பட்டுள்ளன. சென்னையிலும் போராட்டங்கள் ஆரம்பித்துள்ளன. பன்னாட்டு நிறுவனங்களுக்கு கட்சி வித்தியாசமின்றி பட்டுக்கம்பளம் விரிக்கும் அரசியல் கட்சிகளோ வணிகர்களுக்கு ஆதரவழிப்பது போன்ற பாசாங்கு மட்டும் தான் செய்கிறார்கள். அதிகார வர்க்கத்திற்காக உருவாக்கப்படுகின்ற இந்த நகர்ப்புற வளர்ச்சியின் வடிவத்திற்கு எதிரான போராட்டத்தினூடாக மட்டுமே இந்த மாபெரும் சதியை முறியடிக்கமுடியும்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ

## ஜெயந்திமாலாவா ? சொர்ணமாலாவா ?

இந்த தமிழ் சொலிசிற்றரிண்ட அட்டகாசம் தாங்க முடியேல்ல. அவையிண்ட அநியாயத்தினால தான் அரைவாசிப் பேரை சிலோனுக்கு திருப்பி அனுப்புறாங்கள். பிறகு அவையே அதை தடுக்க கூட்டம் வைக்கிறம், கொடி பிடிக்கிறம் என்று பத்திரிக்கை அறிக்கைகள் விடுகினம்.

இதில ஒரு விசயம் நல்லது கண்டியளோ. பெரும்பாலான எங்கட சொலிசிற்றர்மாருக்கு குசினி மாதிரி ஒரு office ஆவது இருக்கு. ஏதும் கெட்டால் அங்கேயாவது போய் நின்று ஆளை அமத்தலாம். ஆனால் இப்ப சில தமிழ் சொலிசிற்றர்மார் freelance எண்டு சொல்லிக் கொண்டு வேலையை எடுக்கினமாம். இவையிட்ட கேசைக் குடுத்து இவையள் தலைமறைவானால் கோவணமும் பறிபோன கதை தான்.

கிட்டடில இப்பிடித்தான் ஒருத்தர் வந்து சொன்னார். யாரோ ஒரு சொலிசிற்றர் தன்ர file உடன் எஸ்கேப்பாம். சொலிசிற்றர் ஆர் எண்டு கேட்டால் 'மாலா'வாம். நாங்கள் எந்த மாலா என்று போவது? ஜெயந்திமாலாவா? சொர்ணமாலாவா?

சொல்லிப் போட்டன்...... office உம் இல்லாத freelance சொலிசிற்றரை எப்போதும் தவிர்க்கவும். முடிந்தால் சொலிசிற்றர்மாரையே தவிர்க்கவும். waste of money.

## சித்திரா! சித்திரா!!

குசினியை பூட்டுங்கள் - Take Away க்கு போன் அடியுங்கள். இதோ வருகிறார் சித்திரா.

இன்ரநஷனல் ரீதியாக over 40's தமிழ் பெண்டுகளை பிசியாக வைத்திருக்கும் அண்ணாமலை, செல்வி, அரசி போன்ற சீரியல்களுக்கு சரிநிகராக நம்மவர்களும் சீரியல் ஒண்டு கொண்டுவருகினம். இதற்கு பெயர் சித்திரா. தீபம் காரர் இத்தொடரை பாத்துவிட்டு சின்ன முகம் சுழிப்பாம். தீபம் பெரிசா முகம் சுழிக்காது கண்டியளோ. They can't afford it. அரசியை காசு குடுத்து வாங்க வேண்டும். சித்திராவை போடுறதுக்கு காசு வாங்கினம். சித்திராவின் தமிழ், பேச்சு, பாவனை பொருத்தமற்றது என்று தீபம்காரர் சொன்னதால் எங்களுடைய ராதா அண்ணன் சித்திராவை தமிழ் நாட்டுக்கு டப்பிங் செய்ய அனுப்பிட்டாராம்.

இந்த லண்டன் வாழ் சிறிலங்கா தமிழ் பெண்டுகளை ராதிகா சரத்குமார் அழவைச்சது காணாதெண்டு இப்போது ராதா அண்ணனும் தொடங்கிட்டார். என்ன இருந்தாலும் இதுகளை அழவைச்சால் அதே புழுத்த வெற்றிதான்.

## டாக்டர் சிவகுமார் மௌனம் ஆனது ஏன்?

இந்திய இராணுவம் அட்டகாசம் நடத்திய காலத்தில பொதுமக்களிண்ட அவஸ்தையை உலக அரங்குக்கு கொண்டு வந்தவர்களில முக்கியமான ஒருவர் டாக்டர் சிவகுமார். இவர் முன்னை நாள் யாழ் இந்து அதிபர் காலம் சென்ற சபாரத்தினம் அவர்களின் மகன்.

பின்னைய காலங்களில் பிரேமதாஸா அரசினால் அமைக்கப்பட்ட APC இற்கு இலங்கை தமிழ் பிரச்சனை தொடர்பாக நகல் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்தார். அதைத் தொடர்ந்து பொட்டம்மானால் சின்ன வெருட்டு விடப்பட்டது.

தற்போது டாக்டர் சிவக்குமார் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் அரசின் வைத்திய ஆலோசகராக கடமை ஆற்றுகிறார். மாதம் ஒரு முறை லண்டன் வாறார். போய்க்கொண்டே இருக்கிறார். பழைய TIC / LTTE circle ஒன்றுடனும் ஒரு தொடர்பும் இல்லையாம். தனிப்பட்ட முறையில் சில லண்டனிலுள்ள சிங்கள நண்பர்களை தவறாமல் சந்திக்கிறாராம். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி கேஸ் தான்.

பேராசிரியர் பெக்கோ


## Cinematographer and Choreographer Wanted

Mathrua Creations Ltd is planning to shoot a Tamil Film on 16mm camera. We require a Cinematographer and a Choreographer to work with the film. Reasonable payment will be made.



### Conditions of the Posts

1) must speak Tamil

2) Must have worked in previous film projects

3) Camera man should have experience of operating film cameras specially Ari3 Super 16mm camera

4) Filming will be taking place in December 2007 and January 2008. You should be available to work in the project for at least 45 days continuously.

Any one with experience and Tamil Cultural background apply to

Director, Film Project, Mathura Creations Ltd, Mathura House

60 London Road, Morden, Surrey SM4 5BE



# வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்

2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX Tel: 020 8527 3819

## காயத்திரி அம்மன் வழிபாடு

காயத்திரி யாக வழிபாடு ஞாயிற்றுக் கிழமைகளில் **நவம்பர் 11, டிசம்பர் 30**

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத்

தொடர்ந்து விசேட பூசை 108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.

## சண்டிஹோமம்

**சண்டிஹோமம் 04 நவம்பர் ஞாயிற்றுக்கிழமை காலை 7:00 மணி முதல்**
**பிள்ளையார் பட்டி டாக்டர் பிச்சைக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.**
**மகாகணபதி ஹோமம் சங்கப்பம் 02 நவம்பர் காலை 9:00 மணிமுதல்**
**துர்க்கா லட்சுமி, சரஸ்வதி, ராஜமாதாங்கி, புவுனேஸ்வரி, ராஜராஜேஸ்வரி**
**முதலிய சாக்த தெய்வங்களை வேண்டி மார்க்கண்டேய புராணத்தில்**
**போற்றப்படுகின்ற தேவி மஹாத்மிய பாராயத்துடன்**

## சண்டிஹோமம்

**நடைபெற தேவியருள் கிடைத்துள்ளது. கல்விப்பேறு, சந்தான விருத்தி**
**முதலிய பலன்களைத் தரவல்ல இவ்வழிபாட்டில் கலந்து சக்தியின் திருவருள்**
**பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். குமாரி பூஜையும் சுமங்கலி பூஜையும் இடம்பெறும்.**

மாங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம்
ஏற்பாடு செய்து தரப்படும்.


**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org